# 1 இனிய தமிழ்ப் பொங்கல்

**படத்தை அவதானிப்போம், கலந்துரையாடுவோம்.**



இந்துப் பண்டிகைகள் பல உள்ளன. அவற்றுள் பொங்கல் விழாவும் ஒன்றாகும். இப்பண்டிகை தை மாதம் முதலாம் திகதி கொண்டாடப்படுகின்றது. எனவே, இதனைத் தைப்பொங்கல் என்றும் அழைப்பர்.

உழவர்களுக்கு விவசாயம் செய்ய வெயிலும், மழையும் தேவை. இவற்றைத் தருவது சூரியன். ''செய்ந்நன்றி மறவாமை'' தமிழர் பண்பாடு. எனவே, சூரியனுக்கு நன்றி செலுத்துவதற்காகத் தைப்பொங்கல் கொண்டாடப்படுகின்றது.

அந்த வகையில் தைப் பொங்கல் பற்றிய பாடல் ஒன்றினை நாம் பாடி மகிழ்வோம்.

## செயற்பாடு - 01

★ பாடலை ஆசிரியர் இசையோடு பாடும்போது, செவி மடுங்கள்.

★ குழுநிலையிலும், தனித்தனியாகவும் பாடலைப் பாடுங்கள்.

**தைத்திருநாள் இல்லமெல்லாம்**
**தளிர்த்திடும் தைப்பொங்கல்**
**இத்தனை நாள் காத்திருந்தோம்**
**இனிய தமிழ்ப் பொங்கல்.**



**கூவி அழைத்திடும் சேவல்**
**குதித்தெழுவோம் குளிப்போம்**
**பூவெடுப்போம் புதிதணிவோம்**
**பொங்கலன்று நாங்கள்.**

**கோலமிட்டு விளக்கேற்றி**
**கும்பிடுவாள் அம்மா**
**பாலெடுத்துப் பொங்கலுக்குப்**
**பானை வைப்பார் அப்பா.**

**விரும்பிய மா வாழை பலா**
**விதவிதமாய்க் கனிகள்**
**கரும்பிளனீர் படைத்து மனம்**
**களித்திடுவோம் நாங்கள்.**



வெண்ணிறப்பால் பொங்கி வர
வெடி சுடுவோம் நாங்கள்
இன்னமுதப் பொங்கலுண்ண
இணைந்து நிற்போம் நாங்கள்.



கவிஞர் அம்பி

## செயற்பாடு - 02

1. பொங்கல் விழா எந்த மாதத்தில் கொண்டாடப் படுகின்றது?

2. பொங்கலன்று கோலமிடுபவர் யார்?

3. முக்கனிகள் எவை?

4. பொங்கல் விழா ஏன் கொண்டாடப்படுகின்றது?

5. பின்வரும் சொற்களுக்கு ஒத்த சொல் தருக.
   அ. மனம்     ஆ. களிப்பு
   இ. நாள்     ஈ. பூ

## சொல் அறிமுகம்

| | | |
|---|---|---|
| உழவர் | - | ගොවියා |
| விவசாயம் | - | ගොවිතැන |
| பண்பாடு | - | සංස්කෘතිය |
| செய்ந்நன்றி | - | කළගුණ සැලකීම |
| மறவாமை | - | අමතක නොකිරීම |
| பண்டிகை | - | උත්සවය |
| தைத்திருநாள் | - | තෛපොංගල් උත්සවය |
| தளிர்த்திடும் | - | දලුලන |
| கூவி | - | හඬලා |
| அழைத்திடும் | - | කතා කරයි |
| பூவெடுப்போம் | - | මල් ගනිමු |
| புதிதணிவோம் | - | අලුත් ඇඳුම් අඳිමු |
| கோலமிட்டு | - | කෝලම් රටා දමා |
| விளக்கேற்றி | - | පහන් දල්වා |
| கரும்பு | - | උක් ගස් |
| இளநீர் | - | කුරුම්බා/තැඹිලි |
| படைத்து | - | පූජා කර |
| களித்திடுவோம் | - | සතුටු වෙමු |
| வெண்ணிறப்பால் | - | සුදු කිරි |
| பொங்கி வர | - | උතුරා එන විට |

## செயற்பாடு - 03

★ *தைப்பொங்கல் அன்று இந்து இல்லங்களில் இடம்பெறும் நிகழ்வுகளை அட்டவணைப்படுத்துங்கள். அவற்றைத் தொகுத்துக் கூறுங்கள்.*

## செயற்பாடு - 04

**பின்வரும் சொற்களை கொண்டு பொங்கல் பற்றி சிறு வாக்கியங்கள் எழுதுங்கள்.**

**சூரியன், இந்துக்கள், தைமாதம், கொண்டாடப்படும், பொங்கல், பண்டிகை, உழவர், கோலம், விவசாயம்.**

## செயற்பாடு - 05

**பின்வரும் உதாரணத்தை அவதானியுங்கள். இடைவெளியை நிரப்புங்கள்.**

**உதாரணம்**

**நான் கொண்டாடுவேன்.**
**நாங்கள் கொண்டாடுவோம்.**

1. நான் கும்பிடுவேன்
   ____________ கும்பிடுவோம்.

2. நான் பாடுவேன்.
   நாங்கள் ____________

3. நான் குளிப்பேன்.
நாம் __________

4. நான் குடிப்பேன்.
__________

5. நான் பூ எடுப்பேன்.
__________ பூ எடுப்போம்.

3. நான் புதிய ஆடை அணிவேன்.
__________ அணிவோம்.

## செயற்பாடு - 06

**பின்வரும் சொற்களுக்குச் சமமான கருத்தைத் தரும் சொல்லை பாடத்தில் இருந்து தெரிவு செய்து எழுதுங்கள்.**

மாதா - __________
பிதா - __________
பழம் - __________
உள்ளம் - __________
மலர் - __________
வீடு - __________
சந்தோஷம் - __________
கதிரவன் - __________
கலாசாரம் - __________
தினம் - __________

பின்வரும் வாக்கியங்களை அவதானியுங்கள்.

1. அம்மா கும்பிடு**வார்.**

2. தம்பி கும்பிடு**வான்.**

3. தங்கை கும்பிடு**வாள்.**

4. உழவர்கள் கும்பிடு**வார்கள்.**

5. குயில் கூவு**ம்.**

6. குயில்கள் கூவி**டும்.**

## செயற்பாடு - 07

**பின்வரும் வாக்கியங்களை முழுமைப்படுத்துங்கள்.**

**உதாரணம்:** **சாப்பிடு**

1. அம்மா சாப்பிடுவார்.
2. தம்பி ______________________
3. தங்கை ______________________
4. உழவர் ______________________
5. குயில் ______________________
6. குயில்கள் ______________________




# ஹலோ........!

**செவிமடுப்போம், சோடிகளாக சேர்ந்து உரையாடுவோம்.**

## உரையாடல் 1



**மோகன் :**
ஹலோ வணக்கம்

**அம்மா :**
வணக்கம். நீங்கள் யார்?

**மோகன் :**
நான் மோகன்.
திருகோணமலையில்
இருந்து.

**அம்மா :**
ஆ! மோகன், எப்படிச்
சுகம்.

**மோகன் :** நல்ல சுகம் அம்மா. கண்ணன் அண்ணா
இல்லையா? கதைக்க முடியுமா?

**அம்மா :** அவர் இல்லை. வெளியே போய்ட்டார்.

**மோகன் :** அவர் எங்கை போனார்?

**அம்மா :** கோயிலுக்கு.......

**மோகன் :** அவர் எப்ப வருவார் அம்மா?

**அம்மா :** சொல்ல முடியாது தம்பி.

**மோகன் :** எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா அம்மா?

**அம்மா :** என்ன உதவி?

**மோகன் :** மோகன் கதைச்சார் எண்டு சொல்லுங்க.

**அம்மா :** சரி மோகன்.

**மோகன் :** நன்றி அம்மா.

**அம்மா :** நன்றி.



## செயற்பாடு - 01

1. தொலைபேசியில் தொடர்பு கொண்டவர் யார்?

2. அவர் எந்த ஊரில் இருந்து தொடர்பு கொண்டார்?

3. மோகன் கதைக்க விரும்பியவர் எங்கே சென்றுள்ளார்?

| பேச்சு வழக்கு | எழுத்து வழக்கு |
|---|---|
| யாரோட | யாருடன் / யாரோடு |
| வேணும் | வேண்டும் |
| போய்ட்டார் | போய்விட்டார் |
| எப்ப | எப்போது / எப்பொழுது |
| சொல்லுங்க | சொல்லுங்கள் |
| கதைச்சார் | கதைத்தார் |
| எண்டு | என்று |
| கதைக்கிறீங்க | கதைக்கிறீர்கள் |

### சொல் அறிமுகம்

| | | |
|---|---|---|
| இல்லையா? | - | නැද්ද? |
| முடியுமா? | - | පුළුවන්ද? |
| எங்கை / எங்கே | - | කොහෙද? |
| போய்ட்டார் | - | ගිහින් / ගියා |
| கோயிலுக்கு | - | කෝවිලට |

## உரையாடல் - 2

**மாணவத்தலைவர்** : ஹலோ வணக்கம்.

**வரவேற்பாளர்** : வணக்கம் யார் கதைக்கிறீங்கள்?

**மாணவத்தலைவர்** : நான் நாவலர் வித்தியாலய மாணவத் தலைவர்.

**வரவேற்பாளர்** : உங்களுக்கு என்ன உதவி வேணும்?

**மாணவத்தலைவர்** : கண்காட்சி பற்றிய விபரம் அறிய வேணும்?

**வரவேற்பாளர்** : என்ன விபரம்?

**மாணவத்தலைவர்** : கண்காட்சி எப்போது ஆரம்பமாகும்?

**வரவேற்பாளர்** : அடுத்த மாதம் முதலாம் திகதி.

**மாணவ தலைவர்** : எப்போது முடிவடையும்.

**வரவேற்பாளர்** : அடுத்த மாதம் 10 ஆம் திகதி.

**மாணவத்தலைவர்** : பார்வையிடக் கூடிய நேரம் என்ன?

**வரவேற்பாளர்** : காலை 9 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை.

**மாணவத்தலைவர்** : பிரவேசக் கட்டணம் எவ்வளவு?

**வரவேற்பாளர்** : பிரவேசக் கட்டணம் 300/= பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை உண்டு.

**மாணவத்தலைவர்** : அனுமதிச் சீட்டுக்களை எங்கே பெறலாம்?

**வரவேற்பாளர்** : வரவேற்பாளரிடம் பெறலாம். அல்லது கண்காட்சி மண்டப வாயிலில் பெறலாம்.

**மாணவத்தலைவர்** : விபரங்களைத் தந்து உதவியமைக்கு நன்றி.

**வரவேற்பாளர்** : தொடர்பு கொண்டமைக்கு நன்றி.

## செயற்பாடு - 02

1. உரையாடலில் பங்கு பற்றியவர்கள் யார்?
2. அவருக்குத் தேவையான விபரங்கள் யாவை?
3. கண்காட்சி எத்தனையாம் திகதி ஆரம்பமாகும்?
4. கண்காட்சியின் அனுமதிக் கட்டணம் எவ்வளவு?
5. கண்காட்சி எத்தனை மணிக்கு ஆரம்பமாகும்?

## செயற்பாடு - 03

**பொருத்தமான வினாச் சொற்களைக்கொண்டு வாக்கியங் களைப் பூரணப்படுத்துங்கள்.**

**(யாருடன், ஏன், எவ்வளவு, எப்போது, என்ன, எங்கே, எப்படி, யாவர்)**

1. மாலா ______________ வரவில்லை?
2. ______________ விபரம் வேண்டும்?
3. கண்காட்சி ______________ ஆரம்பிக்கப்படும்?
4. ______________ கண்காட்சி முடிவடையும்?
5. பிரவேசக் கட்டணம் ______________?
6. அவர் ______________ போனார்?
7. உங்கள் பெயர் ______________?
8. பாடசாலைக்கு ______________ வந்தீர்கள்?
9. பன்சலைக்கு ______________ போவீர்கள்?
10. நீங்கள் ______________ கதைக்க வேண்டும்?
11. உரையாடலில் பங்குபற்றியவர்கள் ______________?

## செயற்பாடு - 04

மேற்படி வாக்கியங்களைப் பூரணப்படுத்திய பின்பு சோடிகளாக இணைந்து ஒருவர் வினா எழுப்ப மற்றவர் விடையளியுங்கள்.

## செயற்பாடு - 05

**தரப்பட்டுள்ள வினாச் சொற்களைப் பயன்படுத்திச் சிறு சிறு வினா வாக்கியங்கள் ஆக்குங்கள்.**

**(என்ன, ஏன், எப்படி, எவ்வாறு, எப்பொழுது, யார், யாருக்கு, எங்கே, யாருடன்)**

______________________________________________

______________________________________________

## செயற்பாடு - 06

மாணவர் இருவர் கொண்ட சோடிகளாகி விரும்பிய தொலைபேசி உரையாடல் ஒன்றை எழுதுங்கள்.

## செயற்பாடு - 07

எழுதிய உரையாடலை அடிப்படையாகக்கொண்டு வகுப் பறையில் பேசிக் காட்டுங்கள்.

## செயற்பாடு - 08

1. புகையிரத நிலைய அதிகாரியுடன் பின்வரும் சொற்களை உள்ளடக்கிய உரையாடல் ஒன்றை எழுதுங்கள்.
   **வணக்கம், தயவுசெய்து, உதவி, எத்தனை மணிக்கு, கட்டணம், எவ்வளவு, புறப்படும், பயணச்சீட்டு.**

2. சோடிகளாக இணைந்து உரையாடுங்கள்.

# 3 நண்பனுக்கு ஒரு கடிதம்

படத்தைப் பார்ப்போம், கலந்துரையாடுவோம்.



# கடிதம் - 1

இல 19,
பிரதான வீதி,
கண்டி.
2015.06.04.

அன்புள்ள அமுதனுக்கு,

நான் நல்ல சுகம். உனது சுகம் எப்படி? உங்கள் அனைவரினதும் சுகத்திற்கு இறைவன் துணை.

நண்பா, நீ அனுப்பிய கடிதம் கிடைத்தது. பொங்கல்ப் பண்டிகை பற்றி எழுதியிருந்தாய். அறிந்துகொண்டேன். மிக்க மகிழ்ச்சி நாங்கள் அடுத்த மாதம் யாழ்ப்பாணம் வருவோம். எமது நண்பர்களான சுனில், சம்பத், ரகுமான், தீபன், நவா ஆகியோரும் என்னுடன் வருவார்கள். நாங்கள் அங்கு இரண்டு நாட்கள் தங்குவோம். ஏற்பாடு செய்ய முடியுமா?

யாழ்ப்பாணத்தில் உள்ள முக்கிய இடங்கள் எவை? அவற்றைச் சுற்றிப் பார்க்க வேண்டும். அத்தோடு உங்கள் அம்மா சமைக்கும் உணவுகளை ருசிக்க ஆவல். உனக்கு விருப்பமான சிங்கள உணவு வகைகளை எனது அம்மா செய்து தருவதாகக் கூறினார்.

கடிதம் கண்டு பதில் தொடரும்.

நன்றி ,
இப்படிக்கு,
உனது அன்பின்,
அசோக.

## செயற்பாடு - 01

1. இக்கடிதம் யாரால், யாருக்கு எழுதப்பட்டுள்ளது?
2. யாழ்ப்பாணத்திற்கு எந்த மாதத்தில் செல்ல இருக்கின் றார்கள்.
3. யாழ்ப்பாணத்திற்குச் செல்ல இருப்பவர்கள் யாவர்?
4. அசோக எதற்கு ஆவலாக இருப்பதாகக் கூறுகின்றான்?
5. சிங்கள மக்களின் உணவு வகைகள் ஐந்தினையும், தமிழர்களின் உணவு வகைகள் ஐந்தினையும் எழுதுக.

## செயற்பாடு - 02

**கடிதம் ஒன்றில் உள்ள விடயங்கள் ஒழுங்கின்றி காணப் படுகின்றன. அதனை ஒழுங்குப்படுத்தி எழுதுங்கள்.**

1. இப்படிக்கு
2. அன்புள்ள நண்பன் கமாலுக்கு,
3. நான் நல்ல சுகம் உனது சுகம் எப்படி?
4. அன்பான நண்பன் குமார்
5. இல - 24,
   5 ஆம் ஒழுங்கை,
   கொழும்பு.
   2015.04.03.
6. அடுத்த மாதம் சித்திரக் கண்காட்சி இருக்கின்றது அதற்கு நீ கட்டாயம் வருகை தரவும்.

01) ______________________
______________________
______________________
______________________

02) ______________________

03)
__________________________________________________
__________________________________________________

04)
__________________________________________________
__________________________________________________
__________________________________________________

05) ______________________

06) ______________________

## செயற்பாடு - 03

★ *யாழ்ப்பாணத்தில் இருக்கும் நண்பராக உம்மைக்கருதி பதில் கடிதம் ஒன்றினை எழுதுங்கள்.*

## செயற்பாடு - 04

**மொழி பெயர்த்து எழுதுங்கள்.**

1. அன்புள்ள அப்பாவுக்கு.

_______________________________

2. நலமறிய ஆவல்.

_______________________________

3. அன்பின் நண்பன் கசுன்.

_______________________________

4. உங்கள் அன்பு மகன்.

_______________________________

5. என்றும் உங்கள் அன்பின்.

_______________________________

## கடிதம் - 2

நிமல் பண்டார
இல 28, பிரதான வீதி,
கண்டி.
2015.05.06.

ஆணையாளர்,
அரச கரும மொழிகள் திணைக்களம்,
ராஜகிரிய.

ஐயா,

**<u>''பேச்சுத் தமிழ்ப்'' பாடநெறிக்கான விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக</u>**

கடந்த ஞாயிற்றுக்கிழமை வீரகேசரி பத்திரிகையில் தமிழ் மொழிப் பாடநெறி பற்றிய தங்கள் விளம்பரத்தைக் கண்டேன். மிக்க மகிழ்ச்சி.

இப்பாடநெறி பற்றி மேலும் அறிய ஆவலாக உள்ளேன். எனவே, மேலதிக விபரங்களையும், விண்ணப்பப் படிவத்தையும் பெறவிரும்புகிறேன். அதற்கான காசுக்கட்டளையை இத்துடன் அனுப்பியுள்ளேன்.

எனவே, அவற்றை எனது முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

நன்றி.
இப்படிக்கு,
உண்மையுள்ள,

நிமல் பண்டார.

## சொல் அறிமுகம்

| | | |
|---|---|---|
| ஆவல் | - | කැමැත්ත |
| ஒழுங்கை | - | පටුමග |
| சித்திரக் கண்காட்சி | - | චිත්‍ර ප්‍රදර්ශනය |
| கலை | - | කලාව |
| கலையரங்கம் | - | කලාභවන |
| சிந்தை | - | සිත |
| சஞ்சிகை | - | සඟරාව |
| விளம்பரம் | - | වෙළඳ දැන්වීම |
| அறிவியல் துணுக்குகள் | - | විද්‍යාත්මක පාඨ |
| ஆணையாளர் | - | කොමසාරිස් |
| அரச கரும மொழிகள் திணைக்களம் | - | රාජ්‍ය භාෂා දෙපාර්තමේන්තුව |
| பாடநெறி | - | පාඨමාලාව |
| காசுக்கட்டளை | - | මුදල් ඇණවුම් |

## செயற்பாடு - 05

**தொழில் முறைக் கடிதம் ஒன்றின் மாதிரியை அவதானியுங்கள். வாசியுங்கள்.**

அனுப்புபவரின் பெயர்/முகவரி

____________________

____________________

____________________

பெறுபவரின் பதவி, முகவரி

____________________

____________________

____________________

விளிப்பு

____________________

தலைப்பு

________________________________________________

விடயம்

________________________________________________

________________________________________________

________________________________________________

அனுப்புபவரின் கையொப்பம்.

## செயற்பாடு - 06

**கடிதத்தை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. இக்கடிதத்தை எழுதியவர் யார்?
2. பாடநெறி பற்றிய விளம்பரம் எந்தப் பத்திரிகையில் காணப்பட்டது?
3. இக்கடிதம் எதற்காக எழுதப்பட்டது?
4. இக்கடிதத்தின் மூலமாக எதனை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்?

## செயற்பாடு - 07

**குழம்பிக் காணப்படும் இக்கடிதத்தை ஒழுங்குபடுத்தி எழுதுங்கள்.**

இப்படிக்கு
உண்மையுள்ள
....................
பாலன்

எம். பாலன்
இல - 15,
5ஆம் ஒழுங்கை,
கொழும்பு - 06

ஐயா, / அம்மணி,

கணக்காளர்
பதவிக்கான
விண்ணப்பப்படிவம்

தங்கள் நிறுவனத்தின்

கணக்காளர்
பதவிக்கான வெற்றிடம்
காணப்பட்டது.

பத்திரிகை
விளம்பரத்தைக்
பார்த்தேன்.

எனது விண்ணப்பப்
படிவத்தை

இத்துடன்
அனுப்பி வைக்கின்றேன்.

முகாமையாளர்,
ரஞ்சனி பிறைவட் லிமிற்ரெட்,
கொழும்பு.

## செயற்பாடு - 08

**மொழி பெயர்த்து எழுதுங்கள்.**

1. கௌரவ அமைச்சர்.

______________________________

2. அம்மணி

______________________________

3. மேற்படி பெயரைக் கொண்ட

______________________________

4. திகதியும், இலக்கமும் கொண்ட

______________________________

5. கீழ்படிவான மாணவன்.

______________________________

6. மின்சாரம் பெற்றுக் கொள்வது தொடர்பாக

______________________________

7. இடமாற்றம் பெற்றுக் கொள்வது தொடர்பாக

______________________________

8. தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

______________________________

9. அனுமதி பெற்றுக் கொள்வது தொடர்பாக

______________________________

10. தேவையான நடவடிக்கைகள்.

______________________________

## செயற்பாடு - 09

**பின்வரும் மாதிரி சுயவிபரப்படிவத்தை அவதானமாக வாசியுங்கள்.**

**குறிப்பு -** *தொழில் முறைக்கடிதங்களுடன் சில சந்தர்ப்பங்களில் சுயவிபரப் படிவமொன்றினை இணைக்க வேண்டி வரலாம். அவ்வாறான மாதிரி சுயவிபரப் படிவத்தைப் பார்ப்போம்.*

**மாதிரிச் சுயவிபரப் படிவம்**

1. **பெயர்** : *சந்திரன்*
2. **முழுப் பெயர்** : *மாசிலாமணி சந்திரன்*
3. **தேசிய அடையாள அட்டை இலக்கம்** : *701691404* V
4. **தொடர்பு இலக்கம்** : *077 - 4532453*
5. **மின்னஞ்சல் முகவரி** : jaya@gmail.com
6. **தனிப்பட்ட முகவரி** : *இல 10, பிராதன வீதி, கண்டி.*
   **அலுவலக முகவரி** : *விஷ்ணு மகாவித்தியாலயம், மட்டக்களப்பு.*
7. **பிறந்த திகதி** : *06.03.1970.*
8. **பால்** : *ஆண்.*
9. **விவாகமானவரா?** : *ஆம்.*
10. **கல்வித் தகைமை** : *க.பொ.த (உ / த).*
11. **தொழிற் தகைமை** : *பயிற்றப்பட்ட ஆசிரியர் (கணிதம்).*
12. **வேறு தகைமைகள்** : *கணினிப் பயிற்சி டிப்ளோமா.*

*மேலே குறிப்பிட்ட தகவல்கள் யாவும் உண்மையானவை என உறுதிப்படுத்துகின்றேன்.*

*01.01.2015*
*திகதி*

______________
*ஒப்பம்*

## செயற்பாடு - 10

**பின்வரும் பந்தியை வாசித்துக் கீழ்வரும் சுயவிபரப் படிவத்தைப் பூரணப்படுத்துங்கள்.**

*இலக்கம் 10, கோவில் வீதி, வவுனியாவில் வசிக்கும் வீராசாமி இரமேஷ்குமார். இவர் வவுனியா விபுலானந்தா வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார். 1975ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21 ஆம் திகதி பிறந்த இவரது தேசிய அடையாள அட்டை இலக்கம் 751691404v ஆகும். கலைப் பட்டதாரியான இவர் ஆரம்பக் கல்வி ஆசிரியர் பயிற்சியைப் பெற்றவர். இவரை* ramesh@gmail.com *எனும் மின்னஞ்சல் முகவரியூடாகவோ அல்லது 079 4928559 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாகவோ தொடர்பு கொள்ளமுடியும்.*

1. பெயர் :
2. முழுப் பெயர் :
3. தேசிய அடையாள அட்டை இலக்கம் :
4. தொடர்பு இலக்கம் :
5. மின்னஞ்சல் முகவரி :
6. தனிப்பட்ட முகவரி :

   அலுவலக முகவரி :

7. பிறந்த திகதி :

8. பால் :

9. விவாகமானவரா? :

10. கல்வித் தகைமை :

11. தொழிற் தகைமை :

12. வேறு தகைமைகள் :

மேலே குறிப்பிட்ட தகவல்கள் யாவும் உண்மையானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

____________ ____________

திகதி ஒப்பம்

# 4 நான் சென்ற சுற்றுலா

**படத்தைப் பார்ப்போம், கலந்துரையாடுவோம்.**



அன்று வெள்ளிக்கிழமை. காலை ஆறு மணி. நான் அப்பாவோடு பாடசாலைக்குச் சென்றேன். எனது நண்பர்களும், பெற்றோர்களுடன் வந்திருந்தனர். எல்லோருடைய முகங்களிலும் மகிழ்ச்சி.

பஸ் வண்டி பாடசாலைக்கு அருகில் நின்றது. நாம் அனைவரும் மகிழ்ச்சியுடன் பஸ்வண்டியில் ஏறினோம். பஸ்வண்டி கண்டியிலிருந்து யாழ்ப்பாணத்தை நோக்கிக் காலை 7.00 மணிக்குப் புறப்பட்டது.

நாங்கள் செல்லும் வழியில் நீர்வீழ்ச்சிகள், மலைத்தொடர்கள், வயல்வெளிகள் என்பவற்றைக் கடந்து சென்றோம். காலை உணவை உண்டோம். பின் பயணம் தொடர்ந்தது.

மாலை நேரம் வெட்ட வெளியில் பனை மரங்கள் பல வரிசையாகக் காணப்பட்டன. யாழ்ப்பாண நகரை நெருங்கிவிட்டோம் என அதிபர் கூறினார். எமக்கு மகிழ்ச்சி இருமடங்காகியது.




முதலில் நல்லூர்க் கந்தசாமி கோயிலுக்குச் சென்றோம். இறைவழிபாடு செய்தோம். இவ் ஆலயத்தின் வரலாற்றைச் சமய ஆசிரியர் எமக்கு விளக்கினார். இந்துக்களின் முக்கிய வழிபாட்டுத் தலங்களில் இதுவும் ஒன்று எனக் கூறினார்.

எமக்கு யாழ்ப்பாண இந்துக் கல்லூரியில் தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. நாங்கள் அங்கு சென்றோம். எம்மை அப்பாடசாலை அதிபரும், ஆசிரியர்களும் இன்முகத்துடன் வரவேற்றார்கள். நல்ல உணவு கிடைத்தது. ருசித்து உண்டோம். ஓய்வெடுத்தோம்.

மறுநாள் காலை இட்லியும், வடையும் சாப்பிட்டு புறப்பட்டோம். முதலில் யாழ் நூலகத்தைப் பார்த்தோம். அது மிகப் பெரிய நூலகம். நிறையத் தமிழ்ப் புத்தகங்கள் இருந்தன. அதன் பின் சிறுவர் பூங்கா, யாழ்க்கோட்டை என்பவற்றைப் பார்த்தோம்.

பகல் 1.00 மணிக்கு மதிய உணவை உண்டோம். யாழ்ப்பாண நாகவிகாரைக்குச் சென்றோம். எமக்குப் படகில் செல்லும் முதல் அனுபவமும் கிடைத்தது. அது எமக்குப் பயத்துடன் கலந்த மகிழ்ச்சியான அனுபவம். அங்கு நாகவிகாரையை வழிபட்டு மீண்டும் வீட்டை நோக்கிப் புறப்பட்டோம்.

**சொல் அறிமுகம்**

| | | |
|---|---|---|
| சுற்றுலா | - | විනෝද චාරිකාව |
| புறப்பட்டது | - | පිටත්වුණා |
| நீர்வீழ்ச்சி | - | දියඇල්ල |
| மலைத்தொடர் | - | කඳුවැටි |
| வயல்வெளி | - | කුඹුරුයායවල්/වෙල් එළි |
| பனை மரம் | - | තල්ගහ |
| வெட்ட வெளி | - | එළිමහන |
| யாழ்கோட்டை | - | යාපනේ කොටුව |

## செயற்பாடு - 01

**விடை எழுதுங்கள்.**

1. பஸ் வண்டி எங்கிருந்து புறப்பட்டது?

2. முதலில் சென்ற இடம் எது?

3. நல்லூர் ஆலயத்தின் வரலாற்றை விளக்கியவர் யார்?

4. சுற்றுலாவில் பார்த்த இடங்கள் எவை?

## செயற்பாடு - 02

மாணவர்களை சோடிகளாக்குங்கள். உணர்ச்சி வெளிப் பாட்டுடன் உரையாடலை வாசியுங்கள்.

### எங்கள் சுற்றுலா

**கண்ணன்** : வணக்கம் விஜி. கடந்த வெள்ளிக்கிழமை உங்களைக் காணவில்லை.

**விஜி** : ஆம் எங்கள் பாடசாலையில் சுற்றுலா சென்றோம்.

**கண்ணன்** : எங்கே சென்றீர்கள்?

**விஜி** : நாங்கள் யாழ்ப்பாணத்திற்குச் சென்றோம்.

**கண்ணன்** : யாழ்ப்பாணத்தில் எங்கே சென்றீர்கள்?

**விஜி** : யாழ்ப்பாணத்தில் நாகவிகாரை, நல்லூர்க் கந்த சுவாமி கோயில், யாழ் நூலகம், ஆறுமுக நாவலர் மடம் என்பவற்றைப் பார்த்தோம்.

**கண்ணன்** : வேறு என்ன பார்த்தீர்கள்?

**விஜி** : நயினா தீவு நாகவிகாரையைப் பார்த்தோம்.

**கண்ணன்** : அங்கு எப்படிப் போனீர்கள்?

**விஜி** : முதலில் பேருந்தில் (பஸ்ஸில்) சென்றோம். பின்பு அங்கிருந்து படகில் சென்றோம்.

**கண்ணன்** : அங்கு விகாரை மட்டுமா பார்த்தீர்கள்?

**விஜி** : இல்லை, இல்லை நாக பூசணி அம்மன் கோவிலையும் பார்த்தோம்.

**கண்ணன்** : படகுப் பயணம் பயமாக இருந்ததா?

**விஜி** : முதற் தடவை என்பதால் சிறிது பயம் இருந்தது. ஆனாலும், புதிய அனுபவம் கிடைத்தது.

**கண்ணன்** : வேறு என்ன பார்த்தீர்கள்?

**விஜி** : நாங்கள் திரும்பி வரும்போது கடலில் சிலர் மீன் பிடித்துக் கொண்டிருந்தார்கள். சிலர் எங்களோடு தாங்கள் பிடித்த மீன்களுடன் கரைக்கு வந்தனர்.

**கண்ணன்** : கரையில் என்ன நடந்தது?

**விஜி** : கரையில் சில வியாபாரிகள் நின்றனர். அவர்கள் மீனவர்களிடம் மீன்களைப் பேரம் பேசி வாங்கினார்கள். வாங்கிய மீன்களைக் கொண்டு சென்றனர்.

**கண்ணன்** : நன்றி மீண்டும் சந்திப்போம்.

## செயற்பாடு - 03

**நான் சென்ற சுற்றுலாவில் கண்டு ரசித்தவை** என்ற தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.

## செயற்பாடு - 04

**வாக்கியங்களைக் கருத்து மாறாமல் சேர்த்து எழுதுவதை அவதானித்து வாசியுங்கள்.**

1. நான் சுற்றுலா போனேன். அம்மா சுற்றுலா போனார்.
   **நானும், அம்மாவும் சுற்றுலாப் போனோம்.**

2. நான் தமிழ் படிக்கின்றேன். கமலா தமிழ் படிக்கின்றாள்.
   **நானும், கமலாவும் தமிழ் படிக்கின்றோம்.**

3. நீங்கள் தமிழ் படிக்கின்றீர்கள். சீலன் தமிழ் படிக்கின்றான்.
   **நீங்களும், சீலனும் தமிழ் படிக்கின்றீர்கள்.**

4. சீலன் தமிழ் படிக்கின்றான். கமலா தமிழ் படிக்கின்றாள்.
   **சீலனும், கமலாவும் தமிழ் படிக்கின்றார்கள்.**

## செயற்பாடு - 05

**வாக்கியங்களைக் கருத்து மாறாமல் சேர்த்து எழுதுங்கள்.**

1. நான் சுற்றுலா செல்கிறேன்.
   அம்மா சுற்றுலா செல்கிறார்.

2. நான் சோறு சாப்பிடுகிறேன்.
   நீங்கள் சோறு சாப்பிடுகிறீர்கள்.

3. நீங்கள் பாடம் படிக்கிறீர்கள்.
   தம்பி பாடம் படிக்கிறான்.

4. அண்ணா படம் பார்க்கின்றார்.
   அக்கா படம் பார்க்கிறார்.

5. நான் பால் குடிக்கின்றேன்.
   நீங்கள் பால் குடிக்கின்றீர்கள்.
   அம்மா பால் குடிக்கின்றார்.

**பின்வரும் வாக்கியங்களை வாசியுங்கள்.**

நான் **அப்பாவோடு** சென்றேன்.
நான் **நண்பர்களோடு** போனேன்.
நாங்கள் **ஆசிரியரோடு** சென்றோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| அப்பா**வோடு** | = | அப்பா | + | **ஒடு** |
| நண்பர்க**ளோடு** | = | நண்பர்கள் | + | **ஒடு** |
| ஆசிரிய**ரோடு** | = | ஆசிரியர் | + | **ஒடு** |

## செயற்பாடு - 06

**பின்வரும் சொற்களோடு ஒடு உருபு சேர்த்து எழுதுங்கள்.**

1. அம்மா ____________________
2. தம்பி ____________________
3. அண்ணா ____________________
4. மாமா ____________________
5. மாமி ____________________

## செயற்பாடு - 07

**இடைவெளிகளை நிரப்புங்கள்.**

1. நான் ________________ சுற்றுலா சென்றேன்.
2. ஆசிரியர் ________________ வீட்டுக்கு வந்தார்.
3. நாங்கள் ________________ கொழும்புக்குப் போனோம்.
4. நான் ________________ தொலைபேசியில் பேசினேன்.
5. தம்பி ________________ விளையாடினான்.



# 5 இல்ல விளையாட்டுப் போட்டி

*நான் பாலன்.*

*இன்று எங்கள் கல்லூரி விளையாட்டுப்போட்டி. காலையில் எழுந்து ஆயத்தம்* **ஆகின்றேன்**. *பாடசாலைக்கு* **விரைகின்றேன்**. *பின் மைதானத்திற்குச்* **செல்கின்றேன்**. *பாடசாலை மைதானம் எங்கும் தோரணங்கள். இல்ல அலங்கரிப்புகள். போட்டி* **ஆரம்பமாவதற்கு** *ஏற்பாடுகள்* **நடைபெறுகின்றன.**



**இதோ கவனிக்கவும். ''இன்னும் சொற்ப வேளையில் 17 வயதின் கீழ்ப்பட்ட ஆண்களுக்கான 100மீற்றர் ஓட்டப்போட்டி ஆரம்பமாக உள்ளது.''**

*100 மீற்றர் ஓட்டப் போட்டியில் எமது இல்லத்தில் நானும் தர்ஷனும் ஓட* **இருக்கின்றோம்.**



**தாமரை, மல்லிகை, முல்லை இல்லங்களைச் சேர்ந்த 105,108,420,425,650,675 ஆகிய இலக்கங்களைக் கொண்ட போட்டியாளர்கள் உடனடியாக மைதானத்திற்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

*தர்ஷன் இன்னும் வரவில்லை,* **தேடுகின்றேன்.**



**தாமரை இல்லத்தைச் சேர்ந்த 105, 108 ஆகிய இலக்கங்களைக் கொண்ட போட்டியாளர்கள் உடனடியாக மைதானத்திற்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

என்னையும் தர்ஷனையும் மைதானத்திற்கு **அழைக்கின்றார்கள்.** அதோ தர்ஷன் **வருகிறான்.** நானும் தர்ஷனும் **ஓடுகின்றோம்.** நான் முதலிடம் **பெறுகின்றேன்.**



எனக்கு மிகுந்த சந்தோசம்.





**100 மீற்றர் ஓட்டப் போட்டியைத் தொடர்ந்து 15 வயதின் கீழ்ப்பட்ட ஆண், பெண் இருபாலருக்குமான நீளம் பாய்தல் போட்டி இடம் பெறும். போட்டியாளர்கள் தயாராக இருக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.**

## சொல் அறிமுகம்

| | | |
|---|---|---|
| சொற்ப வேளையில் | - | ස්වල්ප වේලාවකින් |
| 17 வயதின் கீழ் | - | 17 න් පහළ |
| தாமரை | - | නෙළුම් |
| முல்லை | - | ගැටපිච්ච මල් |
| மல்லிகை | - | පිච්ච |
| போட்டியாளர்கள் | - | තරඟකරුවෝ |
| இருபாலர் | - | ස්ත්‍රී පුරුෂ දෙපාර්ශවය |

### செயற்பாடு - 01

உரையாடல்களை நண்பர்களுடன் இணைந்து வாசியுங்கள்.

### செயற்பாடு - 02

1. இப்பாடத்தில் வரும் இல்லங்களின் பெயர்களைத் தருக.
2. தாமரை இல்லத்திலிருந்து 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்ட போட்டியாளர்கள் யாவர்?
3. 100 மீற்றர் போட்டியில் கலந்துகொள்ளும், போட்டியாளர்களின் இலக்கங்களைத் தருக.
4. 100 மீற்றர் ஓட்டப் போட்டியைத் தொடர்ந்து இடம்பெற உள்ள போட்டி எது?

**பின்வரும் அட்டவணையை அவதானியுங்கள், வாசியுங்கள்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 100 | நூறு | → | 100 | + | நூற்று |
| 200 | இருநூறு | → | 200 | + | இருநூற்று |
| 300 | முந்நூறு | → | 300 | + | முந்நூற்று |
| 400 | நாநூறு | → | 400 | + | நானூற்று |
| 500 | ஐந்நூறு | → | 500 | + | ஐந்நூற்று |
| 600 | அறுநூறு | → | 600 | + | அறுநூற்று |
| 700 | எழுநூறு | → | 700 | + | எழுநூற்று |
| 800 | எண்ணூறு | → | 800 | + | எண்ணூற்று |
| 900 | தொளாயிரம் | → | 900 | + | தொளாயிரத்து |

| | | |
|---|---|---|
| *121* | - | நூற்று இருபத்தொன்று |
| *132* | - | நூற்று முப்பத்திரண்டு |
| *143* | - | நூற்று நாற்பத்து மூன்று |
| *154* | - | நூற்று ஐம்பத்துனான்கு |
| *165* | - | நூற்று அறுபத்தைந்து |
| *176* | - | நூற்று எழுபத்தாறு |
| *187* | - | நூற்று எண்பத்தேழு |
| *198* | - | நூற்றுத் தொண்ணூற்றெட்டு |
| *247* | - | இருநூற்று நாற்பத்தேழு |
| *250* | - | இருநூற்று ஐம்பது |

## செயற்பாடு - 03

**பின்வரும் இலக்கங்களை எழுத்தில் எழுதுங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| 1. 245 | ________________ | 6. 138 | ________________ |
| 2. 360 | ________________ | 7. 443 | ________________ |
| 3. 672 | ________________ | 8. 635 | ________________ |
| 4. 465 | ________________ | 9. 489 | ________________ |
| 5. 120 | ________________ | 10. 490 | ________________ |

**பின்வரும் வாக்கியங்களை அவதானியுங்கள்.**

| தொகுதி 1 | தொகுதி 2 |
|---|---|
| நான் ஓடுகின்றேன்.<br>நாங்கள் ஓடுகின்றோம். | நீ ஓடுகின்றாய்.<br>நீங்கள் ஓடுகின்றீர்கள். |
| நான் போகின்றேன்.<br>நாங்கள் போகின்றோம். | நீ போகின்றாய்.<br>நீங்கள் போகின்றீர்கள். |
| நான் எடுக்கின்றேன்.<br>நாங்கள் எடுக்கின்றோம். | நீ எடுக்கின்றாய்.<br>நீங்கள் எடுக்கின்றீர்கள். |

## செயற்பாடு - 05

# நிகழ்காலம்

**முதல் நிரலை அவதானியுங்கள். அதைப் பின்பற்றி மற்றைய நிரல்களை முழுமைப்படுத்துங்கள்.**

| | ஓடு | விளையாடு | அனுப்பு | பூட்டு | தள்ளு |
|---|---|---|---|---|---|
| நான் | ஓடுகின்றேன் | ________ | ________ | ________ | ________ |
| நாங்கள் | ஓடுகின்றோம் | ________ | ________ | ________ | ________ |
| நீ | ஓடுகின்றாய் | ________ | ________ | ________ | ________ |
| நீங்கள் | ஓடுகின்றீர்கள் | ________ | ________ | ________ | ________ |
| அவர் | ஓடுகின்றார் | ________ | ________ | ________ | ________ |
| அவன் | ஓடுகின்றான் | ________ | ________ | ________ | ________ |
| அவள் | ஓடுகின்றாள் | ________ | ________ | ________ | ________ |
| அவர்கள் | ஓடுகின்றார்கள் | ________ | ________ | ________ | ________ |
| அது | ஓடுகின்றது | | | | |
| | | ________ | ________ | ________ | ________ |
| அவை | ஓடுகின்றன | | | | |

## செயற்பாடு - 06

# நிகழ்காலம்

**முதல் நிரலை அவதானியுங்கள். அதைப் பின்பற்றி மற்றைய நிரல்களை முழுமைப்படுத்துங்கள்.**

| | நடி | நினை | மடி | சந்தி | பார் |
|---|---|---|---|---|---|
| நான் | நடிக்கின்றேன் | ________ | ________ | ________ | ________ |
| நாங்கள் | நடிக்கின்றோம் | ________ | ________ | ________ | ________ |
| நீ | நடிக்கிறாய் | ________ | ________ | ________ | ________ |
| நீங்கள் | நடிக்கிறீர்கள் | ________ | ________ | ________ | ________ |
| அவர் | நடிக்கின்றார் | ________ | ________ | ________ | ________ |
| அவன் | நடிக்கின்றான் | ________ | ________ | ________ | ________ |
| அவள் | நடிக்கின்றாள் | ________ | ________ | ________ | ________ |
| அவர்கள் | நடிக்கின்றார்கள் | ________ | ________ | ________ | ________ |
| அது | நடிக்கின்றது | | | | |
| | | ________ | ________ | ________ | ________ |
| அவை | நடிக்கின்றன | | | | |

**பின்வரும் இடைவெளியை நிரப்புங்கள்.**

1. நீ (நினை) ____________________
2. அது (பற) ____________________
3. நீங்கள் (பூட்டு) ____________________
4. அவள் (நடு) ____________________
5. நான் (பார்) ____________________

## செயற்பாடு - 07

01. நான் (ஓடு) ______________________

நாங்கள் (ஓடு) ______________________

நீ (ஓடு) ______________________

நீங்கள் (ஓடு) ______________________

02. நான் (படி) ______________________

நாங்கள்(படி) ______________________

நீ (படி) ______________________

நீங்கள் (படி) ______________________

03. நான் (வாசி) ______________________

நாங்கள் (வாசி) ______________________

நீ (வாசி) ______________________

நீங்கள் (வாசி) ______________________

04. நான் (பாய்) ______________________

நாங்கள் (பாய்) ______________________

நீ (பாய்) ______________________

நீங்கள் (பாய்) ______________________

05. ______________________ குடிக்கின்றேன்.

______________________ குடிக்கின்றோம்.

______________________ குடிக்கின்றீர்.

______________________ குடிக்கின்றீர்கள்.

## பின்வரும் அழைப்பிதழை அவதானிப்போம், வாசிப்போம்.

**இல்ல விளையாட்டுப் போட்டி**

**இ/ இரத்திநேஸ்வராத் தமிழ் வித்தியாலயம்**

திகதி : 2015 .02 .15

நேரம் : மு.ப 10.00

இடம் : இரத்தினபுரி நகர சபை மைதானம்

பிரதம அதிதி : கௌரவ விளையாட்டுத்துறை அமைச்சர்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
அதிபர், ஆசிரியர்கள்
விழா ஏற்பாட்டுக் குழு

## செயற்பாடு - 08

**பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அழைப்பிதழ் ஒன்றினைத் தயாரியுங்கள்.**

*கலைவிழா*

*2015. 03. 10*

*பாரதி கலையரங்கம்*

*கவிஞர் - தமிழ் அன்பன் (பிரதம அதிதி)*

# விளம்பரம்

**இதோ வெளிவந்துவிட்டது!**

**சின்னஞ் சிறிய சிறுவர்கள்**

**சிந்தை மகிழ்ந்து படித்திடும்**

**மாதாந்தச் சஞ்சிகை**



## செயற்பாடு - 09

புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள பற்பசை ஒன்றிற்கான விளம்பரம் ஒன்றினைத் தயாரியுங்கள்.

## செயற்பாடு - 10

**பின்வரும் நிகழ்ச்சி நிரலை அடிப்படையாகக் கொண்டு வகுப்பறையில் அறிவித்தலைச் செய்து காட்டுங்கள்.**



**19 வயதின் கீழ் ஆண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டி ஆரம்பமாகவுள்ளது. 245, 246, 360, 365, 670, 672 இலக்கங்களைக் கொண்ட போட்டியாளர்கள் மைதானத்திற்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

| நிகழ்ச்சி | வயது | போட்டியாளர்களின் இலக்கங்கள் |
|---|---|---|
| *800 மீற்றர் ஆண்கள்* | *19 வயதின் கீழ்* | *245, 246, 360, 365, 670, 672* |
| *உயரம் பாய்தல் பெண்கள்* | *17 வயதின் கீழ்* | *154, 156, 463, 465, 663,664* |
| *குண்டெறிதல் ஆண்கள்* | *15 வயதின் கீழ்* | *120, 121, 489, 490, 621, 622* |
| *அஞ்சலோட்டம்* | *13 வயதின் கீழ்* | *146, 147, 464, 465, 634, 635* |
| *ஈட்டி எறிதல்* | *19 வயதின் கீழ்* | *138, 139,443, 44, 636, 637* |

## செயற்பாடு - 11

**பின்வரும் அறிவித்தலை அவதானியுங்கள், வாசியுங்கள்.**




இன்னும் சற்று நேரத்தில் யாழ்தேவி கடுகதிப் புகையிரதம் மூன்றாம் மேடைக்கு வர உள்ளது.

இது மு.ப 5.30 மணிக்கு யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படும். யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படும் யாழ்தேவி கடுகதி புகையிரதம்.

பொல்காவெல

குருநாகல்

மாகோ

அனுராதபுரம்

வவுனியா

கிளிநொச்சி ஆகிய நிலையங்களில் நிறுத்தப்படும்.

நன்றி

வணக்கம்.

## செயற்பாடு - 12

**இடைவெளிகளை நிரப்புங்கள்.**

*பயணிகளின் கவனத்திற்கு!*

*இன்னும் சற்று நேரத்தில் உடரட்ட மெனிக்கே புகையிரதம் __________ மேடைக்கு வர உள்ளது.*

*இது பி.ப __________ பதுளை நோக்கிப் புறப்படும். பதுளை நோக்கிப் புறப்படும் __________ புகையிரதம் அனைத்துப் புகையிரத __________ தரித்து செல்லும்.*

__________

__________

# 6 தீராத விளையாட்டுப் பிள்ளை

**பாடலை ஆசிரியர் இசையோடு பாடும்போது செவிமடுப்போம், குழுநிலையிலும், தனித்தனியாகவும் பாடலைப் பாடுவோம்.**



தீராத விளையாட்டுப் பிள்ளை - கண்ணன்
    தெருவிலே பெண்களுக் கோயாத தொல்லை.

தின்னப் பழங்கொண்டு தருவான் - பாதி
    தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்;
என்னப்பன் என்னையன் என்றால் - அதனை
    எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான்.

தேனொத்த பண்டங்கள் கொண்டு - என்ன
செய்தாலும் எட்டாத உயரத்தில் வைப்பான்
மானொத்த பெண்ணடி என்பான் - சற்று
மனமகிழும் நேரத்தி லேகிள்ளி விடுவான்.

அழகுள்ள மலர்கொண்டு வந்தே - என்னை
அழ அழச் செய்துபின், ''கண்ணை மூடிக்கொள்
குழலிலே சூட்டுவேன்'' என்பான் - என்னைக்
குருடாக்கி மலரினைத் தோழிக்கு வைப்பான்.

- பாரதியார்-



## சந்தி பிரித்து உரத்து வாசித்துப் பழகுங்கள்

தீராத விளையாட்டுப் பிள்ளை - கண்ணன்
தெருவிலே பெண்களுக்கு ஓயாத தொல்லை.

தின்னப் பழம் கொண்டு தருவான் - பாதி
தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்;
என் அப்பன் என் ஐயன் என்றால் - அதனை
எச்சில் படுத்திக் கடித்துக் கொடுப்பான்.

தேன் ஒத்த பண்டங்கள் கொண்டு - என்ன
செய்தாலும் எட்டாத உயரத்தில் வைப்பான்
மான் ஒத்த பெண்ணடி என்பான் - சற்று
மனம் மகிழும் நேரத்திலே கிள்ளி விடுவான்.

அழகு உள்ள மலர்கொண்டு வந்தே - என்னை
அழ அழச் செய்துபின், ''கண்ணை மூடிக்கொள்
குழலிலே சூட்டுவேன்'' என்பான் - என்னைக்
குருடாக்கி மலரினைத் தோழிக்கு வைப்பான்.

## சொல் அறிமுகம்

| | | |
|---|---|---|
| தீராத | - | නිමාවක් නැති/නොසන්සිඳෙන |
| ஓயாத | - | නිමාවක් නැති |
| தட்டிப் பறிப்பான் | - | උදුරා ගනී |
| எச்சிற்படுத்தி | - | ඉඳුල් කර |
| தேன் ஒத்த | - | මී පැණි වගේ රසවත් |
| பண்டங்கள் | - | කෑම වර්ග |
| எட்டாத | - | අල්ලන්න බැරි |
| மான் ஒத்த | - | මුවෙකු බඳු |
| மனம் மகிழும் | - | සිත සතුටු වන |
| கிள்ளி | - | කොනිත්තා |
| குழலிலே | - | බටනලාවේ |
| சூட்டுவேன் | - | මලක් පළඳමි |
| குருடாக்கி | - | අන්ධ කොට |

## செயற்பாடு - 01

**பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (சரி) எனவும், பிழையாயின் (பிழை) எனவும் குறிப்பிடுங்கள்.**

1. கண்ணன் ஒரு தீராத விளையாட்டுப் பிள்ளை. ( )
2. கண்ணன் தெருவிலே ஆண்களுக்கு ஓயாத தொல்லை கொடுப்பான். ( )
3. கண்ணன் தின்னப் பழம் கொண்டு தருவான். ( )
4. கண்ணன் பழங்களைத் தட்டிப் பறிக்க மாட்டான். ( )
5. என்னப்பன் என்னையன் என்றால் பழத்தை எச்சிற்படுத்தி திருப்பிக் கொடுப்பான். ( )

## செயற்பாடு - 02

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. தீராத விளையாட்டுப் பிள்ளை யார்?
2. கண்ணன் ஓயாமல் தொல்லைக் கொடுப்பது யாருக்கு?
3. தின்பதற்கு கண்ணன் கொண்டுவந்து தருவது என்ன?
4. பாதி தின்கின்றபோது, கண்ணன் செய்யும் குறும்பு யாது?
5. பெண்கள் கண்ணனிடம் எவ்வாறு கெஞ்சுவார்கள்?
6. மானொத்த பெண் என வர்ணித்து யாது செய்வான்?
7. அழகுள்ள எவற்றைக் கொண்டு வருவான்?
8. அழகுள்ள மலரினை யாருக்கு வைப்பான்?

## செயற்பாடு - 03

1. *இப்பாடலை அபிநயத்துடன் பாடுங்கள்.*

## செயற்பாடு - 04

1. *இப்பாடலில் கண்ணன் செய்யும் குறும்புகளைப் பட்டியற்படுத்துங்கள்.*
2. *கண்ணனின் குறும்புகளில் உமக்குப் பிடித்த குறும்பு யாது? ஏன்?*

**நிறந்தீட்டப்பட்டுள்ள சொற்களை அவதானியுங்கள். அவை கண்ணன் செய்யும் குறும்புகளை எதிர்காலத்தில் காட்டுகின்றன.**

1. *கண்ணன் மலரினைத் தோழிக்கு* **வைப்பான்.**

2. *கண்ணன் தின்கின்ற போதிலே தட்டிப்* **பறிப்பான்.**

3. *கண்ணன் எச்சிற்படுத்திக் கடித்துக்* **கொடுப்பான்.**

4. *கண்ணன் மனமகிழும் நேரத்திலே* **கிள்ளி விடுவான்.**

5. *கண்ணன் குழலிலே* **சூட்டுவான்.**

6. *கண்ணன் தின்னப் பழம் கொண்டு* **தருவான்.**

**1. கண்ணன் (அவன்) வைப்பான், பறிப்பான், கொடுப்பான்.**

**2. கண்ணன் (அவன்) கிள்ளிவிடுவான், சூட்டுவான், தருவான்.**

## செயற்பாடு - 05

**பின்வரும் அட்டவணையை முழுமைப்படுத்துங்கள்.**

| | படி | சிரி | ஆடு | விளையாடு |
|---|---|---|---|---|
| அவன் | படிப்பான் | ................ | ................ | ................ |
| அவள் | ................ | ................ | ஆடுவாள் | ................ |

**முதல் நிரலை அவதானியுங்கள், அதைப் பின்பற்றி மற்றைய நிரல்களை முழுமைப்படுத்துங்கள்.**

**எதிர்காலம்**

| | சிரி | கதை | உடை | நட | திற |
|---|---|---|---|---|---|
| நான் | சிரிப்பேன் | ________ | ________ | ________ | ________ |
| நாங்கள் | சிரிப்போம் | ________ | ________ | ________ | ________ |
| நீ | சிரிப்பாய் | ________ | ________ | ________ | ________ |
| நீங்கள் | சிரிப்பீர்கள் | ________ | ________ | ________ | ________ |
| அவர் | சிரிப்பார் | ________ | ________ | ________ | ________ |
| அவன் | சிரிப்பான் | ________ | ________ | ________ | ________ |
| அவள் | சிரிப்பாள் | ________ | ________ | ________ | ________ |
| அவர்கள் | சிரிப்பார்கள் | ________ | ________ | ________ | ________ |
| அது<br>அவை | சிரிக்கும் | ________ | ________ | ________ | ________ |

**முதல் நிரலை அவதானியுங்கள் அதைப் பின்பற்றி மற்றைய நிரல்களை முழுமைப்படுத்துங்கள்.**

| | ஆடு | பாடு | சாப்பிடு | விளையாடு | அனுப்பு |
|---|---|---|---|---|---|
| நான் | ஆடுவேன் | ______ | ______ | ______ | ______ |
| நாங்கள் | ஆடுவோம் | ______ | ______ | ______ | ______ |
| நீ | ஆடுவாய் | ______ | ______ | ______ | ______ |
| நீங்கள் | ஆடுவீர்கள் | ______ | ______ | ______ | ______ |
| அவர் | ஆடுவார் | ______ | ______ | ______ | ______ |
| அவன் | ஆடுவான் | ______ | ______ | ______ | ______ |
| அவள் | ஆடுவாள் | ______ | ______ | ______ | ______ |
| அவர்கள் | ஆடுவார்கள் | ______ | ______ | ______ | ______ |
| அது<br>அவை | ஆடும் | ______ | ______ | ______ | ______ |

**பின்வரும் இடைவெளியை நிரப்புங்கள்.**

1. நான் (சிரி) ______________________
2. அது (குடி) ______________________
3. அவர்கள் (அனுப்பு) ______________________
4. அவை (சாப்பிடு) ______________________
5. அவர் (வாங்கு) ______________________

## செயற்பாடு - 06

**தீராத விளையாட்டுப் பிள்ளை போன்ற வேறு பாடல்களை இசையோடு பாடுங்கள். மாதிரிப் பாடல்.**

### அம்மா என் தெய்வம்





அம்மா, அம்மா வருவாயே
அன்பாய் முத்தம் தருவாயே
அம்மா உன்னைக் கண்டாலே,
அழுகை ஓடிப் போய்விடுமே.

பத்து மாதம் சுமந்தாயே
பாரில் என்னைப் பெற்றாயே.
பத்தி யங்கள் காத்தாயே
பாடு பட்டு வளர்த்தாயே.

அழகு மிக்க சந்திரனை
ஆகாயத்தில் காண்பித்தே,
பழமும், பாலும் ஊட்டிடுவாய்.
பாட்டும் கதையும் கூறிடுவாய்.



தமிழைக் கற்றுத் தந்திடுவாய்.
தத்துப் பித் தெனப் பேசிடினும்,
அமுதம் அமுதம் என்றிடுவாய்.
அணைத்து முத்தம் தந்திடுவாய்.

எனக்குச் சிறுநோய் வந்தாலும்,
ஏனோ மிக்க வருந்துகிறாய்?
உணவும் இன்றி, உறங்காது,
உயிர்போல் என்னைக் காக்கின்றாய்.

உன்னைப் போலே வளர்த்திடுவோர்,
உலகில் உண்டோ, வேறொருவர்?
என்னைக் காக்கும் அம்மாவே,
எனக்குத் தெய்வம் நீதானே.

## சொல் அறிமுகம்

| | |
|---|---|
| தெய்வம் | - දෙවියෝ |
| முத்தம் | - හාදුව |
| பார் | - ලෝකය |
| சந்திரன் | - හඳ |
| ஆகாயம் | - අහස |
| வேறொருவர் | - වෙනත් අයෙක් |

## செயற்பாடு - 07

1. அன்பாக முத்தம் தருபவர் யார்?
2. அம்மா எதனைக் காட்டிப் பாலும், பழமும் ஊட்டுவார்?
3. ''தத்துப் பித்''தெனப் பேசும்போது, அம்மா என்ன கூறுவார்?
4. நோய் வந்தால் அம்மா என்ன செய்வார்?
5. இப்பாடலில் உமக்குப் பிடித்த இரண்டு அடிகளை எழுதுங்கள்.

## செயற்பாடு - 8

**பின்வரும் சொற்களுக்குச் சமமான கருத்தைத் தரும் சொல்லைத் தெரிந்து எழுதுங்கள்.**

**(சாப்பாடு, கடவுள், பிணி, உலகம், வானம்)**

1. பார் -

2. ஆகாயம் -

3. உணவு -

4. தெய்வம் -

5. நோய் -

# 7 வைத்தியருடன்

**உரையாடலை செவிமடுப்போம், சோடிகளாக இணைந்து உரையாடுவோம்.**



பெயர் என்ன?

நந்தினி

வயது

முப்பது வயது.

என்ன வருத்தம்?

காய்ச்சலும், இருமலும், வாந்தியும்.

எத்தனை நாளாய்.

நேற்று இரவில் இருந்து.

சரி...... ஆ..... காட்டுங்க....... நல்லாய் மூச்செடுத்து விடுங்க.
இரவு முழுவதும் காய்ச்சல் இருந்ததா?

ஓ..... டொக்டர். நடுக்கத்தோடு காய்ச்சல் இருந்தது.

மருந்து எடுக்க இல்லையா?

பனடோல் குடிச்சன். காய்ச்சல் விட இல்லை.

இந்த மருந்தை மூன்று நாள் குடிக்க வேணும். காலமை, பகல், இரவு
மூண்டு வேளையும் சாப்பாட்டுக்குப் பின் குடியுங்க.

டொக்டர் எல்லாச் சாப்பாடும் சாப்பிடலாமா?

இல்லை, இல்லை எண்ணெய்ச் சாப்பாடுகள், உறைப்புச்
சாப்பாடுகள் சாப்பிட வேண்டாம்.

சரி டொக்டர்.

இரவு 10 மணிக்குப் பிறகு ஒண்டும் சாப்பிட வேண்டாம்.

ஏன் டொக்டர்

இரத்தம் சோதிக்க வேணும். கட்டாயம் காலமை 10 மணிக்கு வாங்க.

அப்ப வாறன் டொக்டர்.

சரி, இந்தத் துண்டு பிரசுரத்தை வாசியுங்கோ.

# டெங்கு ஒழிப்போம்! உயிர் காப்போம்!



டெங்கு பயங்கரமானது.
உயிரைக் கொல்லும்.
டெங்குவிலிருந்து
எங்கள் பிள்ளைகளைக் காப்போம்.

காப்பது எப்படி?



டெங்கு நுளம்புகள் சுத்தமான
நீர் தேங்கிய இடங்களில் முட்டையிட்டுத்
தமது இனத்தைப் பெருக்குகின்றன.
எனவே,
நீர் தேங்கி நிற்கும் இடங்களை ஒழிப்போம்.



சிரட்டைகள், யோக்கட் கப், டயர்கள்
முதலியவற்றை அகற்றுவோம்.

## நோயற்ற வாழ்வே! குறைவற்ற செல்வம்.

கொழும்பு மாநகர சபை.

## செயற்பாடு - 01

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. நோயாளிக்கு ஏற்பட்டுள்ள வருத்தங்கள் யாவை?
2. நோயாளி எத்தனை நாட்களுக்கு மருந்து குடிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது?
3. நோயாளி செய்யவேண்டிய பரிசோதனை யாது ?
4. நோயாளிக்கு வைத்தியரால் கூறப்பட்ட ஆலோசனைகள் யாவை?

## செயற்பாடு - 02

**உரத்து வாசியுங்கள், பேசுங்கள்.**

எண்ணெய்ச் சாப்பாடுகள்
உறைப்புச் சாப்பாடுகள்
குளிரான சாப்பாடுகள்
பத்து மணிக்குப் பின்பு
→ ஒண்டும் சாப்பிட வேண்டாம்.

இளநீர்
குளிர்பானங்கள்
→ குடிக்க வேண்டாம்.

**மருந்து**

சாப்பாட்டிற்கு முன்பு
சாப்பாட்டிற்குப் பின்பு
காலைச் சாப்பாட்டிற்கு முன்பு / பின்பு
பகல் சாப்பாட்டிற்கு முன்பு / பின்பு
இரவுச் சாப்பாட்டிற்கு முன்பு / பின்பு
காலையில் மட்டும்
மாலையில் மட்டும்
இரவு மட்டும்
→ குடியுங்க.

| பேச்சு வழக்கு | எழுத்து வழக்கு |
|---|---|
| பேர் | பெயர் |
| டொக்டர் | வைத்தியர் |
| மூண்டு | மூன்று |
| வேணும் | வேண்டும் |
| காலமை | காலையில் |
| குடியுங்க | குடியுங்கள் |
| தண்ணி | தண்ணீர் |
| எடுங்க | எடுங்கள் |
| ஒண்டும் | ஒன்றும் |
| வாங்க | வாருங்கள் |

## செயற்பாடு - 03

**பேசிப் பழகுங்கள், எழுதிப் பழகுங்கள்.**

★ நான் நேற்றுக் காலை மருந்து குடித்தேன்.
★ நான் இன்று காலை மருந்து குடிக்கின்றேன்.
★ நான் நாளை காலை மருந்து குடிப்பேன்.

★ நான் நேற்றுக் காலை பாடம் படித்தேன்.
★ நான் இன்று காலை பாடம் படிக்கின்றேன்.
★ நான் நாளை காலை பாடம் படிப்பேன்.

★ நான் நேற்று மாலை விளையாடினேன்.
★ நான் இப்பொழுது விளையாடுகின்றேன்.
★ நான் நாளை காலை விளையாடுவேன்.

## செயற்பாடு - 04

**பொருத்தமான சொற்களைக் கொண்டு வாக்கியங்களைப் பூரணப்படுத்தி வாசியுங்கள்.**

**(நாளை காலை, நேற்று இரவு, இப்பொழுது, சாப்பாட்டிற்கு முன்பு, சாப்பாட்டிற்குப் பின்பு , மாலையில்)**

1. நோயாளி ____________________ நன்றாகத் தூங்கவில்லை.

2. நோயாளி ____________________ மருந்து குடிக்க வேண்டும்.

3. நாங்கள் ______________________ பாடம் படிக்கின்றோம்.

4. அப்பா ______________________ வேலைக்குப் போவார்.

5. நான் ______________________ பழம் சாப்பிட்டேன்.

6. பிள்ளைகள் ______________________ விளையாடுவார்கள்.

## செயற்பாடு - 05

சோடிகளாக இணைந்து தபாற்கந்தோரில் இடம்பெறும் உரையாடல் ஒன்றை எழுதுங்கள்.

## செயற்பாடு - 06

சோடிகளாகி எழுதிய உரையாடலைப் பாத்திரம் ஏற்று நடியுங்கள்.

## செயற்பாடு -7

**"டெங்கு நோயை ஒழிக்க ஒத்துழைப்போம்"** என்ற தலைப்பில் குழுவாகத் துண்டுப்பிரசுரம் ஒன்றைத் தயாரியுங்கள்.

# 8 பால் குடிக்காத பூனை

**படங்களைப் பார்ப்போம், கலந்துரையாடுவோம்.**





விஜய நகரத்தில் எலித்தொல்லை. இது நாளுக்கு நாள் அதிகரித்தது. எலிகள் தானியங்களைத் தின்றன. வேறு பொருட்களையும் தின்றன. அதனால் மக்கள் அனைவரும் கவலைப்பட்டனர். அரசரிடம் சென்று முறையிட்டனர். இந்த எலிகளைக் கட்டுப்படுத்த அரசன் எண்ணினான். அரசன் மந்திரிகளுடன் கலந்து ஆலோசனை செய்தான்.

எலிகளை அழிக்கப் பூனைகளை வளர்க்க முடிவு செய்தனர். ஒவ்வொரு வீட்டிலும் கட்டாயமாக ஒரு பூனை வளர்க்க முடிவு செய்தனர். இதற்காகப் பாரசீகத்தில் இருந்து பூனைகள் கொண்டு வரப்பட்டன. ஒரு பூனையும், ஒரு பசுவும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்க முடிவு செய்தனர். தெனாலிராமனுக்கும் ஒரு பூனையும் ஒரு பசுவும் வழங்கப்பட்டன.



நாட்டு மக்கள் அரசனின் கட்டளையை ஏற்றனர். பூனைகளுக்கு நல்ல முறையில் பால் கொடுத்து வளர்த்தனர். பூனைகள் பால் குடித்து நன்றாகக் கொழுத்தன. ஆனால் தெனாலிராமனின் பூனையோ மெலிந்திருந்தது. அதற்குக் காரணம் உண்டு. ஒருநாள் பாலை நன்கு சுடச் சுடக் காய்ச்சி னார் தெனாலிராமன். பின் அதைத் தனது பூனைக்கு வைத்தார். பூனையின் வாய் சுட்டது. பூனையின் வாய் புண்ணாகியது. **''சூடுகண்ட பூனை அடுப்பங்கரை நாடாது''** என்பதற்கிணங்க, பாலைக் கண்டால் அது பயந்து ஓடிவிடும் நிலை ஏற்பட்டது. இதனால் அப்பூனை மெலிந்துவிட்டது.

இவ்வாறு ஒரு மாதம் போனது. ஒரு மாதத்திற்குப் பின் அரசனின் கட்டளைப்படி பூனைகளை அரச மாளிகைக்கு மக்கள் கொண்டு வந்தார்கள். அங்கு தெனாலிராமனும் தன் பூனையுடன் வந்தான். அவனது பூனை மிகவும் மெலிந்திருந்தது. ''ஏன் உன் பூனை மெலிந்திருக்கிறது?'' என அரசர் கேட்டார். ''அரசே என் பூனை எலிகளை மட்டும் தான் பிடிக்கும். பாலைக் கண்டால் ஓடிவிடும். எமது நோக்கம் எலிகளை அழிப்பது தானே?'' என்று கூறினார்.



இவ்வாறு பேசிக்கொண்டிருந்த போது, ஒரு எலி குறுக்காக ஓடியது. உடனே தெனாலிராமனின் பூனை அதனை ஓடிப்பிடித்தது. **பார்த்தீர்களா அரசே! அரண்மனைப் பூனைகள் பாலைக் குடித்து விட்டு நன்றாகத் தூங்குகின்றன. அதனால் எலிகள் பயமில்லாமல் ஓடித் திரிகின்றன** என்றார்.

தெனாலிராமன் கூறுவதில் உண்மை இருப்பதை அரசன் உணர்ந்தான். தனது அறிவுக் கண்ணைத் திறந்த ராமனைப் பாராட்டினார். 100 பொற்காசுகளைப் பரிசாக வழங்கினார்.

**''சூடுகண்ட பூனை அடுப்பங்கரை நாடாது''**

## செயற்பாடு - 01

**பாடத்தை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான சொல்லைத் தெரிந்து வாக்கியங்களை முழுமைப்படுத்துங்கள்.**

1. விஜயநகரத்தில் ____________________ தொல்லை.
   (பூனைத், நாய்த், எலித்)

2. எலிகள் ____________________ தின்றன.
   (பூனைகளைத், தானியங்களைத், புத்தகங்களைத்)

3. அரசன் ____________________ கலந்தாலோசித்தான்.
   (மந்திரிகளுடன், தெனாலிராமனுடன், மக்களுடன்)

4. எலிகளை அழிக்க ____________________ வளர்க்க முடிவு செய்தனர்.
   (நாய்களை, பசுக்களை, பூனைகளை)

5. பூனையின் ____________________ சுட்டது.
   (வால், மூக்கு, வாய்)

6. அரசன் தெனாலிராமனுக்கு ____________________ பரிசாக வழங்கினான்.
   (100 பொற்காசுகளை, 100 பசுக்களை, 100 பூனைகளை)

## செயற்பாடு - 02

**கீறிட்ட இடங்களை நிரப்புங்கள்.**

1. ________ பூனை அடுப்பங்கரை நாடாது.
2. பாலைக் ________ ஓடிவிடும்.
3. ஏன் உன் பூனை ________?
4. ஒரு எலி ________ ஓடியது.
5. நாட்டுமக்கள் அரசனின் ________ ஏற்றனர்.

## செயற்பாடு - 03

**பொருத்தமான விடைகளை எழுதுங்கள்.**

1. விஜய நகர எலிகள் எவற்றைத்தின்றன?
2. எலிகளை அழிப்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கை யாது?
3. பூனைகள் எங்கிருந்து கொண்டு வரப்பட்டன?
4. பூனை பால் குடிக்காதமைக்கான காரணம் யாது?
5. தெனாலிராமனின் பூனை எப்படி இருந்தது?

## செயற்பாடு - 04

இக்கதையின் சுருக்கத்தை உமது மொழி நடையில் கூற முயற்சி செய்யுங்கள்.

## செயற்பாடு - 05

**பின்வரும் தமிழ்ச் சொற்களுக்கு இணையான சிங்களச் சொற்களை எழுதுங்கள்.**

1. எலி - ________
2. நாள் - ________
3. நகரம் - ________
4. மக்கள் - ________
5. பூனை - ________
6. நான் - ________
7. பசு - ________
8. புண் - ________
9. பரிசு - ________

## சொல் அறிமுகம்

| | | |
|---|---|---|
| எலித்தொல்லை | - | මී උවදුර |
| அதிகரித்தது | - | වැඩිවුණා |
| தானியங்கள் | - | ධාන්‍ය |
| எண்ணினார் | - | සිතුවා |
| கலந்து ஆலோசனை செய் | - | රැස්වී සාකච්ඡා කරන්න |
| கொண்டு வா | - | ගෙන එන්න |
| கட்டளை | - | අණ කිරීම |
| கொழுத்தன | - | මහත විය |
| மெலிந்திருந்தது | - | කෙට්ටු විය |
| காய்சினார் | - | උණු කළේය |
| புண்ணாகியது | - | තුවාල විය |
| அரசமாளிகை | - | රජ මාළිගාව |
| குறுக்காக | - | හරහා |
| பாராட்டினார் | - | ප්‍රශංසා කළා |

## ஒத்தகருத்துச் சொற்கள்

நாள் - தினம்

அரசன் - மன்னன்

வீடு - இல்லம்

நிலா - மதி

பூ - மலர்

பொன் - தங்கம்

சந்தோஷம் - மகிழ்ச்சி

துன்பம் - கவலை

## எதிர்கருத்துச் சொற்கள்

முன் - பின்

முடிவு - ஆரம்பம்

உண்மை - பொய்

அடி - முடி

ஆக்கல் - அழித்தல்

| | | |
|---|---|---|
| இயற்கை | - | செயற்கை |
| இலாபம் | - | நட்டம் |
| ஈரம் | - | வரட்சி |
| ஏற்றம் | - | இறக்கம் |
| ஒளி | - | இருள் |
| ஒற்றுமை | - | வேற்றுமை |
| கனவு | - | நனவு |
| காலம் | - | அகாலம் |
| காலை | - | மாலை |
| குறை | - | நிறை |
| சுகம் | - | துக்கம் |
| செல்வம் | - | வறுமை |
| செலவு | - | வரவு |
| சேர்த்தல் | - | பிரித்தல் |
| தீமை | - | நன்மை |

| | | |
|---|---|---|
| நல்லார் | - | தீயார் |
| நினைவு | - | மறதி |
| நீதி | - | அநீதி |
| முன்னர் | - | பின்னர் |
| மேடு | - | பள்ளம் |
| வலம் | - | இடம் |
| விருப்பு | - | வெறுப்பு |
| வினா | - | விடை |

## பழமொழிகள்

சூடுகண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது எனும் பழமொழியை நாம் இப்பாடத்தில் கற்றோம். எங்கள் முன்னோர்களது அறிவு மற்றும் அனுபவ வாயிலாகத் தோன்றிய ஆழ்ந்த கருத்துள்ள சொற்றொடர்கள் பழமொழிகள் எனப்படும்.

இவை சமூகத்தின் கண்ணாடி இப்பழமொழிகளின் ஊடாக மொழியின் வளத்தையும், பண்பாட்டையும் அறியலாம்.

**பின்வரும் பழமொழிகளை வாசிப்போம்.**

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும். **(முகம் ஒரு கண்ணாடி)**

2. அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும். **(விடா முயற்சி)**

3. அழுதபிள்ளை பால் குடிக்கும். **(முயற்சி)**

4. ஆழமறியாது காலை விடாதே. **(ஆராய்ந்து செய்)**

5. இக்கரை மாட்டுக்கு அக்கரைப் பச்சை.
**(திருப்தியற்ற மனம்)**

6. இட்டுக்கெட்டார் எங்குமில்லை. **(தருமத்தின் சிறப்பு)**

7. இளங்கன்று பயமறியாது. **(வாலிபத் துணிவு)**

8. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.
**(இளமையின் சிறப்பு)**

9. உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்.
**(உலோபித்தனம் கூடாது)**

10. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
**(நன்றி மறக்கக் கூடாது)**

11. காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு.
**(தன்னுடையது பெரிது)**

12. சிறுதுளி பெருவெள்ளம். **(சிறியதன் பெருமை)**

13. தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.
**(பழக்கத்தின் வலிமை)**

14. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
**(சுகமே செல்வம்)**

*15.* *பழகப் பழகப் பாலும் புளிக்கும்.*

**(நாளாக நாளாக எதுவும் வெறுக்கும்)**

*16.* *மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.*

**(பெரியோர் வாக்கின் பெறுமதி)**

*17.* *விளையும் பயிர் முளையில் தெரியும்.*

**(ஆரம்பம் போல் முடிவு)**

*18.* *வெள்ளம் வருமுன் அணைக்கட்ட வேண்டும்.*

**(முன்னேற்பாடு)**

*19.* *சூடுகண்ட பூனை அடுப்பங்கரை நாடாது.*

**(அனுபவ அறிவு)**

*சிங்களப் பழமொழிகளுக்கு ஒத்த சில தமிழ்ப் பழமொழிகளை இங்கு அறிந்து கொள்வோம். அவை கருத்து ரீதியாக ஒத்திருந்தாலும், கையாள்கின்ற ஒப்புமை முறையில் வேறுபட்டும் ஒத்தும் காணப்படுகின்றன.*

**தமிழிலும் சிங்களத்திலும் கருத்து ஒப்புமைகள் ஒத்திருக்கும் பழமொழிகள்**

*1.* *மின்னுவதெல்லாம் பொன்னல்ல.*
දිළිසෙන සියල්ල රන් නොවේ.

*2.* *நிறைகுடந் தளும்பாது.*
පිරුණු කළේ දිය නොසැලේ.

*3.* *குரைக்கிற நாய் கடிக்காது.*
බුරන බල්ලා හපා නොකයි.

4. கூழுக்குமாசை மீசைக்குமாசை.
රැවුලත් ඕනේ කැඳත් ඕනේ.

5. கைக்கெட்டியது வாய்கெட்டவில்லை.
අතට ගත් දේ කටට දා ගන්න පින නෑ.

## வேறுபட்ட ஒப்புமைகள் உள்ள பழமொழிகள்

1. ஆனைக்கும் அடி சறுக்கும்.
ගුරාටත් අකුරු වරදී.

2. காக்கைக்குந் தன் குஞ்சு பொன்குஞ்சு.
උනහපුලුවාටත් උගේ පැටියා මැණිකක්.

3. அழமறியாது காலையிடாதே.
පනින්න පෙර සිතා බලන්න.

4. ஆனைக்கொரு காலம் பூனைக்கொருகாலம்.
කොකාට වාරයක් තියෙනවානම් තිත්තයාටත් වාරයක් තියෙනවා.

5. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
කල දුටු කල වළ ඉහ ගන්න.

6. சிறுதுரும்பும் பல்குத்த உதவும்.
කුකුල් බෙටිත් බෙහෙතට ඕන වෙයි.

7. அழுதபிள்ளை பால் குடிக்கும்.
අඬන්න ඕනේ කිරි එරෙන්න.

8. குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர்.
කතාව දෝළාවෙන් ගමන පයින්.

## செயற்பாடு - 06

**பின்வரும் இடைவெளியை நிரப்பிப் பழமொழிகளை முழுமைப் படுத்துங்கள்.**

1. சூடுகண்ட ____________________ அடுப்பங்கரை நாடாது.
2. இளமையிற் ____________________ சிலையில் எழுத்து.
3. அழுத பிள்ளை ____________________ குடிக்கும்.
4. பழகப் பழகப் ____________________ புளிக்கும்.
5. ஆழமறியாது ____________________ விடாதே.

## செயற்பாடு - 07

**பின்வரும் கருத்துக்களை உணர்த்தும் பழமொழிகளை எழுதுங்கள்.**

1. தன்னுடையது பெரியது.

   ________________________________________

2. நன்றி மறக்கக் கூடாது.

   ________________________________________

3. சிறியதன் பெருமை.

   ________________________________________

4. கல்வியின் சிறப்பு.

   ________________________________________

5. அனுபவ அறிவு.

   ________________________________________

## செயற்பாடு - 08

**உங்களுக்கு விருப்பமான பழமொழிகள் ஐந்தைத் தேடிப் பட்டியல் படுத்தி எழுதுங்கள்.**

_______________________________________________

_______________________________________________

**பின்வரும் வாக்கியத்தை அவதானியுங்கள்.**

எலிகளை அழிக்க பூனைகளை வளர்க்க முடிவு செய்தனர்.

தெனாலிராமன் பூனை**யை** வளர்த்தான்.

**'ஐ'**

பூனை ⟶ பூனை**யை**

பேனை - கண்ணன் பேனை**யை** எடுத்தான்.

கதவு - கண்ணன் கத**வை** மூடினான்.

## செயற்பாடு - 09

**பின்வரும் சொற்களைக் கொண்டு வாக்கியங்களை முழுமைப் படுத்துங்கள்.**

**(ஆசிரியர், அதிபர், அம்மா, நண்பன், பிள்ளை)**

1. ______________ பார்த்தேன்.
2. ______________ சந்தித்தேன்.
3. ______________ கண்டேன்.
4. ______________ அழைத்தேன்.
5. ______________ வளர்த்தேன்.

# 9 சந்தைக்குப் போவோம்

**படத்தை அவதானிப்போம், கலந்துரையாடுவோம், செவிமடுப்போம், சோடிகளாக இணைந்து உரையாடுவோம்.**



**சாரதா** : வணக்கம் முதலாளி.

**முதலாளி** : வணக்கம் அம்மா.

**சாரதா** : என்ன மரக்கறி இருக்கு முதலாளி?

**முதலாளி** : போஞ்சி, கரட், பீட்றூட், லீக்ஸ், நோக்கோல், கோவா, பூசணிக்காய், வெண்டிக்காய், கத்தரிக் காய், முருங்கைக்காய், உருளைக் கிழங்கு எல்லாம் இருக்கு.

**சாரதா** : முருங்கைக்காய் என்ன விலை?

**முதலாளி** : ஒரு கிலோ 60 ரூபாய்.

**சாரதா** : விலை குறைக்க முடியாதா?

**முதலாளி** : அம்மா, இப்ப மரக்கறி எல்லாம் விலை அதிகம்.

**சாரதா** : சரி அப்ப ரெண்டு கிலோ தாங்க. கரட் என்ன விலை?

**முதலாளி** : 100 ரூபாய்.

**சாரதா** : கரட் 500 கிராம் தாங்க. பூசணிக்காய் ஒரு கிலோவும் தாங்க.

**முதலாளி** : இந்தாங்க. வேற என்ன வேணும்?

**சாரதா** : கீரை இருக்கா?

**முதலாளி** : ஓ.... புதுக்கீரை இருக்கு. என்ன கீரை வேணும்.

**சாரதா** : வல்லாரை ஒரு கட்டு தாங்க.

**முதலாளி** : இந்தாங்க.

**சாரதா** : ஐயோ! முதலாளி, இது பழைய கீரை, எனக்கு வேண்டாம். தேங்காய் இருக்கா?

**முதலாளி** : ஓ இருக்கு. பெரிய தேங்காய் ஒண்டு 50ரூபாய், சின்ன தேங்காய் ஒண்டு 40 ரூபாய். எது வேணும்.

**சாரதா** : பெரிய தேங்காய் 5 தாங்க.

**முதலாளி** : இந்தாங்க வேற என்ன வேணும்.

**சாரதா** : ஒண்டும் வேண்டாம். கணக்கு எவ்வளவு?

**முதலாளி** : ஐநூறு ரூபாய்.

**சாரதா** : இந்தாங்க காசு. நன்றி

**முதலாளி** : நன்றி.

| பேச்சு வழக்கு | எழுத்து வழக்கு |
| --- | --- |
| வாங்க | வாருங்கள் |
| இருக்கா? | இருக்கின்றதா? |
| இருக்கு | இருக்கின்றது. |
| தாங்க | தாருங்கள் |
| இந்தாங்க | இந்தாருங்கள் |
| வேணும் | வேண்டும் |
| வேற | வேறு |
| ஒண்டும் | ஒன்றும் |
| ரெண்டு | இரண்டு |

## செயற்பாடு - 01

சோடிகளாக இணைந்து உரையாடலை உணர்ச்சி வெளிப் பாட்டுடன் வாசியுங்கள்.

## செயற்பாடு - 02

**உரையாடலை வாசியுங்கள். பொருத்தமான சொற்களை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிவு செய்யுங்கள். இடைவெளி களைப் பூரணப்படுத்துங்கள்.**

1. ஒரு கிலோ ______________________ நூறு ரூபா
   (கத்தரிக்காய், பீட்றூட், கரட், முருங்கைக்காய்)

2. ஒரு கிலோ முருங்கைக்காய் ______________________ ரூபா
   (ஐம்பது, நூறு, அறுபது)

3. ______________________ தேங்காய் நாற்பது ரூபா
   (பெரிய, சின்னத்)

4. ______________________ தேங்காய் ஐம்பது ரூபா
   (பெரிய, சின்னத்)

5. எல்லா மரக்கறிகளும் ______________________ அதிகம்.
   (அளவான, விலை, மலிவு)

## செயற்பாடு - 03

**பின்வரும் வாக்கியங்களை அவதானியுங்கள், வாசியுங்கள்.**

1. புது
   - க் கீரை
   - க் கரட்
   - மரக்கறி
   - போஞ்சி

   இருக்கா?

2. பழைய
   - கீரை
   - கரட்
   - மரக்கறி
   - போஞ்சி

   வேண்டாம்?

3. நல்ல
   - பழம்
   - கீரை
   - கரட்
   - மரக்கறி

   இல்லையா?

4. சின்ன
   - ப் பழம்
   - க் கிழங்கு
   - த் தேங்காய்
   - போஞ்சி

   தாங்க.

5. பெரிய
   - பழம்
   - கிழங்கு
   - தேங்காய்
   - பூசணிக்காய்

   வேணும்

## செயற்பாடு - 04

**பொருத்தமான அடைமொழியை வைத்துப் பூரணப்படுத்துங்கள்.**

1. எனக்கு ______________________ பழம் வேண்டும்.
2. எனக்கு ______________________ தேங்காய் வேண்டாம்.
3. எனக்கு ______________________ மரக்கறி வேண்டாம்.
4. எனக்கு ______________________ காய் தாருங்கள்.
5. எனக்கு ______________________ கீரை வேண்டாம்.

## செயற்பாடு - 05

**நீங்கள் பழக்கடை ஒன்றுக்கு சென்றால் எவ்வாறு பழங்களை வாங்குவீர்கள்? அதனை உரையாடல் வடிவில் எழுதுங்கள்.**

## செயற்பாடு - 06

**பின்வரும் வாக்கியங்களை அவதானியுங்கள், வாசியுங்கள்.**

**தொகுதி 1**

தம்பி சந்தைக்குப் போகின்றான்.
சிறுவன் வருகின்றான்.
குமார் படிக்கின்றான்.

**தொகுதி 2**

தங்கை சந்தைக்குப் போகின்றாள்
சிறுமி வருகின்றாள்.
குமாரி படிக்கின்றாள்.

**தொகுதி 3**

அப்பா சந்தைக்கு போகின்றார்.
அம்மா வருகின்றார்.
ஆசிரியர் வருகின்றார்.

**தொகுதி 4**

தம்பியும்தங்கையும் சந்தைக்குப் போகின்றார்கள்.
சிறுவனும் சிறுமியும் வருகின்றார்கள்.
சிறுவர்கள் வருகின்றார்கள்.

**தொகுதி 5**

நாய் ஓடுகின்றது.
பூனை பாய்கின்றது.

**தொகுதி 6**

நாய்கள் ஓடுகின்றன.
பூனைகள் பாய்கின்றன.

## செயற்பாடு - 07

**பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுங்கள்.**

1. மாணவி (வாசிக்கின்றான் / வாசிக்கின்றாள்)
2. அப்பா (போகின்றார் / போகின்றாள்)
3. மாமா (வருகின்றார்கள் / வருகின்றார்)
4. அம்மா (சமைக்கின்றான் / சமைக்கின்றார்)
5. மாணவன் (பாடுகின்றான் / பாடுகின்றாள்)
6. மயில் (ஆடுகின்றன / ஆடுகின்றது)
7. குதிரை (ஓடுகின்றன / ஓடுகின்றது)
8. ஆசிரியர் (எழுதுகின்றார் / எழுதுகின்றாள்)
9. மாணவர்கள் (விளையாடுகின்றன/ விளையாடுகின்றார்கள்)
10. தாத்தா (நடக்கின்றார் / நடக்கின்றாள்)

1. அவன் பால் குடிக்கின்**றான்.** (ஆன்)
2. அவள் பால் குடிக்கின்**றாள்.** (ஆள்)
3. அவர் பால் குடிக்கின்**றார்.** (ஆர்)
4. அவர்கள் பால் குடிக்கின்**றார்கள்.** (ஆர்கள்)
5. அது /இது குடிக்கின்**றது.** (அது)
6. அவை / இவை குடிக்கின்**றன.** (அன)

## செயற்பாடு - 08

**பொருத்தமான சொற்களைத் தெரிவுசெய்து வாக்கியங் களைப் பூரணப்படுத்துங்கள்.**

**(செல்கின்றார்கள், பாடுகின்றது, ஆடுகிறாள், வாசிக்கின்றார், தைக்கின்றார்கள், ஊற்றுகின்றார், செல்கின்றார், வருகின்றார், சாப்பிடுகின்றது, விளையாடுகின்றார்கள், பறக்கின்றன, கற்பிக்கின்றனர்.)**

*உதாரணம் :* *தம்பி பந்து விளையாடுகின்றான்.*

*தம்பிமார் பந்து விளையாடுகின்றார்கள்.*

1. அம்மா தேநீர் ____________________
2. தங்கை நடனம் ____________________
3. அப்பா பத்திரிகை ____________________
4. தங்கைமார் நடந்து ____________________
5. தாத்தா நடந்து ____________________
6. பாட்டி நடந்து ____________________
7. குயில் பாட்டு ____________________
8. கிளி பழம் ____________________
9. கிளிகள் ஆகாயத்தில் ____________________
10. மாணவர்கள் மைதானத்தில் ____________________
11. அம்மாமார் ஆடைகள் ____________________
12. ஆசிரியர்கள் பாடசாலையில் ____________________



# 10 நான் விரும்பும் பெரியார்

**படங்களைப் பற்றிக் கலந்துரையாடுவோம்.**







**இக்கட்டுரையை கிரகித்து வாசிப்போம்.**



தமிழுக்கும், சைவத்திற்கும் தொண்டாற்றிய அறிஞர்கள் பலர். அவர்களில் ஆறுமுகநாவலரும் ஒருவர். இலங்கையிலும், இந்தியாவிலும் பெரிதும் மதிக்கப்பட்டவர்.

இவரது தந்தை கந்தப்பிள்ளை, தாய் சிவகாமி அம்மையார். இளமையில் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கற்றார். தமிழ், இலக்கண இலக்கியங்களைக் கற்றார். சமய இலக்கியங்களையும் கற்று உணர்ந்தார்.

புனித பைபிளைத் தமிழில் மொழிபெயர்த்தார். மக்களுக்குச் சமயச் சொற்பொழிவுகள் ஆற்றினார். தாய் மொழியில் பற்று உண்டாக்கினார்.

தாய் மொழியில் சிறுவர்கள் கல்வி கற்க வேண்டும் என்று எண்ணினார். யாழ் நகரில் சைவப்பிரகாச வித்தியாசாலையைத் தாபித்தார். நூல்கள் பல எழுதினார். சிறுவர்களுக்கும், பெரியவர்களுக்கும் வேண்டிய புதிய நூல்களையும் அச்சிட்டார்.

இவற்றில் பாலபோதினி, பாலபாடம், இலக்கணச்சுருக்கம், சைவ வினா விடை போன்ற நூல்கள் சிலவாகும். செய்யுள் வடிவில் இருந்த நூல்களை வசன நடையில் எழுதினார். இவற்றை அச்சிட இயந்திரசாலையை நிறுவினார். பல நூல்களை அச்சிட்டு வழங்கினார். இவரது சமய, தமிழ்ப் பணிகளைப் பாராட்டி இந்தியாவிலும் இலங்கையிலும் பற்பல பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இவரது தொண்டு தமிழும், சைவமும் உள்ள வரை மறக்கமுடியாது.

## செயற்பாடு - 01

**சரி (✓) பிழை (✗)இடுக.**

1. இக்கட்டுரை ஆறுமுகநாவலரைப் பற்றியது. ( )
2. ஆறுமுகநாவலர் புனித பைபிளைத் தமிழில் மொழி பெயர்க்கவில்லை. ( )
3. ஆறுமுகநாவலர் இலக்கணச் சுருக்கத்தை எழுதினார். ( )

## செயற்பாடு - 02

1. ஆறுமுக நாவலர் வாழ்ந்த இடம் எது?

2. அவரின் பெற்றோர்கள் யாவர்?

3. நாவலர் சிறுவர்களுக்காக எழுதிய இரு நூல்களைக் குறிப்பிடுங்கள்.

4. நாவலரால் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்ட நூல் எது?

## செயற்பாடு - 03

★ மாணவர்கள் ஒவ்வொருவரும் முன் வந்து ஆறுமுக நாவலரைப் பற்றி 10 வாக்கியங்கள் பேசுங்கள்.

## செயற்பாடு - 04

★ நீங்கள் விரும்பும் பெரியார் ஒருவரைப் பற்றி 10 வாக்கியங்கள் கொண்ட சிறு பந்தியொன்றை எழுதுங்கள்.

## செயற்பாடு - 05

நான் விரும்பும் பெரியார் எனும் கட்டுரையிலுள்ள முதல் இரு பந்திகளை சிங்களத்தில் மொழிபெயர்ப்புச் செய்யுங்கள்.

## செயற்பாடு - 06

**பின்வரும் தமிழ் வாக்கியங்களைத் சிங்கள மொழியில் மொழி பெயர்ப்புச் செய்யுங்கள்.**

1. நான் பத்தாம் வகுப்பில் கற்கின்றேன்.

_______________

2. தமிழ் மொழியை விருப்பத்துடன் கற்கின்றேன்.

_______________

3. எனது தம்பி ஐந்தாம் வகுப்பில் படிக்கின்றான்.

_______________

4. எனது அப்பா ஒரு புகையிரத நிலைய அதிபர் ஆவர்.

_______________

5. எனது அப்பாவை நான் மிகவும் நேசிக்கின்றேன்.

_______________

6. எங்கள் பாடசாலை அதிபர் மிகவும் நல்லவர்.

_______________

7. அதிபரை நான் மிகவும் மதிக்கிறேன்.

_______________

8. எனது வகுப்பு மாணவர்கள் எல்லோருமே மிகவும் கெட்டிக்காரர்கள்.

_______________

**பின்வரும் வாக்கியங்களை வாசியுங்கள். தடித்த எழுத்திலுள்ள சொற்களை அவதானியுங்கள்.**

ஆறுமுகநாவலர் **இலங்கையில்** பிறந்தார்.

ஆறுமுகநாவலர் **இந்தியாவில்** பல பட்டங்களைப் பெற்றார்.

| | | | |
|---|---|---|---|
| இலங்கை | + இல் | = | இலங்கை**யில்** |
| இந்தியா | + இல் | = | இந்தியா**வில்** |
| யாழ்ப்பாணம் | + இல் | = | யாழ்ப்பாணத்**தில்** |
| கொழும்பு | + இல் | = | கொழும்**பில்** |
| மன்னார் | + இல் | = | மன்னா**ரில்** |

## செயற்பாடு - 07

**பின்வரும் இடைவெளிகளை நிரப்புங்கள்.**

1. நான் ______________ இருக்கிறேன்.

2. நான் ______________ பிறந்தேன்.

3. நாங்கள் ______________ இருந்து வருகின்றோம்.

4. எனது மாமா ______________ இருக்கிறார்.

5. தம்பி ______________ படிக்கிறான்.

# 11 கிராம உத்தியோகத்தரும் கிராம வாசியும்

**உரையாடலை செவிமடுப்போம், சோடிகளாக இணைந்து உரை யாடுவோம்.**




**கிராமவாசி கதிர்வேல்** : *வணக்கம் ஐயா!*

**கிராம உத்தியோகத்தர்:** *வணக்கம். இருங்க. என்ன விசயம்?*

**கதிர்வேல்** : *நற்சான்றிதழ் பத்திரம் தேவை ஐயா*

**கிராம உத்தியோகத்தர்** : *யாருக்கு?*

**கதிர்வேல்** : *மகனுக்கு*

**கிராம உத்தியோகத்தர்** : *எதுக்கு?*

**கதிர்வேல்** : *ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பிக்க.*

**கிராம உத்தியோகத்தர்** : *உங்கள் மகன் இவரா?*

**கதிர்வேல்** : *ஓம் ஐயா!*

| | | |
|---|---|---|
| **கிராம உத்தியோகத்தர்** | : | *உங்கள் குடும்பத்தைப் பற்றி எனக்கு நல்லாய்த் தெரியும். கொஞ்சம் இருங்க.* |
| **கதிர்வேல்** | : | *சரி சரி.* |
| **கிராம உத்தியோகத்தர்** | : | *தம்பி, பெயர் என்ன?* |
| **கலாதரன்** | : | *கதிர்வேல் கலாதரன்.* |
| **கிராம உத்தியோகத்தர்** | : | *எத்தனை வயசு?* |
| **கலாதரன்** | : | *இருபத்தாறு.* |
| **கிராம உத்தியோகத்தர்** | : | *முகவரி என்ன?* |
| **கலாதரன்** | : | *இலக்கம் 15, கோயில் வீதி, திருகோணமலை.* |
| **கிராம உத்தியோகத்தர்** | : | *அடையாள அட்டை இலக்கம் என்ன?* |
| **கலாதரன்** | : | *891478405* V |
| **கிராம உத்தியோகத்தர்** | : | *இதில கையொப்பம் வையுங்க. சரி, இந்தாங்க சான்றிதழ்.* |
| **கதிர்வேல்** | : | *நன்றி ஐயா.* |
| **கலாதரன்** | : | *நன்றி சேர்.* |

## செயற்பாடு - 01

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

1. கிராம உத்தியோகத்தரைச் சந்திக்க வந்தவர்கள் யாவர்?
2. எதற்காகக் கிராம உத்தியோகத்தரைச் சந்திக்க வந்தார்கள்?
3. கதிர்வேல் கலாதரனின் வயது எத்தனை?
4. கலாதரனின் முகவரி என்ன?

| பேச்சு வழக்கு | எழுத்து வழக்கு |
|---|---|
| இருங்க | இருங்கள் |
| ஓம் | ஆம் |
| இதிலை | இதிலே / இதில் |
| சேர் | ஐயா |
| வையுங்க | வையுங்கள் |
| எதுக்கு | எதற்கு |
| ஒண்டு | ஒன்று |
| நல்லாய் | நன்றாக |
| வயசு | வயது |

## செயற்பாடு - 02

**வதிவிடச் சான்றிதழ் பெறுவதற்கு பின்வரும் இடைவெளிகளை நிரப்பி உரையாடலை முழுமைப் படுத்துங்கள்.**

1. **கலா** : வணக்கம்
2. **கிராம உத்தியோகத்தர்** : ______________________________
3. **கலா** : எனக்கு ஒரு ______________________________ தேவை.
4. **கிராம உத்தியோகத்தர்** : ______________________________?
5. **கலா**: கணக்காளர் ______________________________ விண்ணப்பிக்க வேண்டும்.
6. **கிராம உத்தியோகத்தர்** : உங்கள் முழுப்பெயர் ______?
7. **கலா** : ______________________________
8. **கிராம உத்தியோகத்தர்** : வயது ________________?
9. **கலா** : ______________________________
10. **கிராம உத்தியோகத்தர்**: முகவரி ________________?
11. **கலா** : ______________________________
12. **கிராம உத்தியோகத்தர்** : ________________ இலக்கம் என்ன?
13. **கலா** : ________________
14. **கிராம உத்தியோகத்தர்** : சான்றிதழ் ________________
15. **கலா** : ________________

# தபால் நிலையம் எங்கே?





மாமா தபால் நிலையத்துக்குப் போக வேணும், போவது எப்படி?

1. தம்பி! நேரே போங்க வைத்தியசாலை ஒண்டு இருக்கு.
2. வலது பக்கம் திரும்புங்க.
3. கொஞ்சத்தூரம் போனதும், சிறுவர் பூங்காத் தெரியும்.
4. கொஞ்சத் தூரம் போனதும், விகாரை தெரியும்.
5. விகாரைக்குப் பக்கத்திலை பாடசாலை ஒழுங்கை இருக்கு.
6. பாடசாலை ஒழுங்கையிலை கொஞ்சத்தூரம் போங்க.
7. பாடசாலையைக் காணலாம்.
8. பாடசாலைக்குப் பக்கத்திலை நூல் நிலையம் இருக்கு.
9. நூல் நிலையத்துக்குப் பக்கத்திலை தபால் நிலையம் இருக்கு.

| பேச்சு வழக்கு | எழுத்து வழக்கு |
| --- | --- |
| வேணும் | வேண்டும் |
| போங்க | போங்கள் / செல்லுங்கள் |
| திரும்புங்க | திரும்புங்கள் |
| பக்கத்திலை | பக்கத்தில் / அருகில் |
| ஒழுங்கையிலை | ஒழுங்கையில் |
| கொஞ்சத்தூரம் | சிறிது தூரம் |
| இருக்கு | இருக்கிறது / உண்டு |

## செயற்பாடு - 03

**பின்வரும் இடைவெளிகளுக்குப் பொருத்தமான எழுத்து வழக்குச் சொற்களைச் சேர்த்துப் பூர்த்தி செய்யுங்கள்.**

மாமா தபால் நிலையத்திற்குப் போக ____________ போவது எப்படி?

1. தம்பி நேரே ____________ வைத்தியசாலை ஒன்று இருக்கின்றது.
2. வலது பக்கம் ____________
3. கொஞ்சத்தூரம் போனதும், ____________ தெரியும்.
4. சிறிது தூரம் சென்றதும் ____________ தெரியும்.

5. விகாரைக்குப் ____________________ பாடசாலை ஒழுங்கையைக் காணலாம்.

6. பாடசாலை ____________________ ____________________ ____________________

7. பாடசாலை ____________________

8. பாடசாலைக்கு ____________________ நூல் நிலையம்.

9. நூல் நிலையத்திற்குப் ____________________ தபால் நிலையம்.

## செயற்பாடு - 04

**படத்தை அவதானியுங்கள், நூல் நிலையத்திற்குச் செல்லும் வழியைக் கூறுங்கள்.**



## செயற்பாடு - 05

**மேலே தரப்பட்டுள்ள மாதிரிப் படத்தினை அடிப்படையாகக் கொண்டு வழிகாட்டுங்கள்.**

1. நேரே ________________
2. வலது பக்கம் ________________ பாடசாலையைக் காணலாம். பின்னர்
3. ________________ பக்கம் திரும்புங்கள்.
4. சிறுவர் பூங்காவைக் காணலாம்.
5. ________________ திரும்புங்கள்.
6. மீண்டும் ________________ திரும்புங்கள்.
7. வைத்தியசாலை ________________
8. வைத்தியசாலைக்குப் ________________ நூல் நிலையம் உண்டு.

## செயற்பாடு - 06

உங்கள் வீட்டில் இருந்து உங்கள் பாடசாலைக்குச் செல்லும் வழியைக் கூறுங்கள். அதை வரைந்து காட்டுங்கள்.

# 12 கீரியும் பாம்பும்



ஓர் ஏழை விவசாயி ஒரு கீரி வளர்த்தான். அந்தக் கீரி மிகவும் கெட்டிக்காரத்தனம் உடையது. எஜமான் விசுவாசமும் கொண்டது. ஒருநாள் விவசாயி எங்கோ சென்றிருந்தான். விவசாயியின் மனைவி தன் குழந்தைக்குப் பால் ஊட்டிவிட்டுத் தூங்க வைத்தாள். தண்ணீர் எடுத்துவரக் கிணற்றடிக்குக் குடத்துடன் சென்றாள். கீரி காவலுக்கு நின்றது.

விவசாயியின் மனைவி சென்ற பின்பு கரு நாகம் ஒன்று அங்கே வந்தது. குழந்தை பாயில் தூங்கிக் கொண்டிருந்தது. பாம்பு குழந்தைக்குப் பக்கமாகச் சென்றது. இதைக் கீரி பார்த்தது. பாம்பின் மேல் தாவியது.

கீரி பாம்பைக் கடித்தது. துண்டு துண்டாக்கியது. விவசாயியின் மனைவி வரும்வரை காத்திருந்தது.

விவசாயியின் மனைவி குடத்தை நிரப்பிக்கொண்டு திரும்பினாள். அவள், வீட்டின் வெளியே கதவருகில் நின்றுகொண்டிருந்த கீரியைக் கண்டாள். கீரியின் முகத்தில் இரத்தத்தைக் கண்டாள். அவள் தன் குழந்தையைக் கீரி கடித்துவிட்டது என நினைத்தாள். துக்கத்தாலும், கோபத்தாலும் நீர் நிரம்பிய குடத்தைக் கீரியின் மேல் போட்டாள். அப்பாவியான கீரி துடிதுடித்து இறந்துவிட்டது.

அந்தப் பெண் வீட்டினுள் ஓடினாள். அங்கே குழந்தை சுகமாகத் தூங்கிக்கொண்டிருந்தது. ஒரு கருநாகம் கொல்லப் பட்டிருந்தது. அப்பொழுது தான் அவளுக்கு உண்மை விளங்கியது. இறந்த கீரியை மடியில் வைத்துக் கொண்டாள். அழத் தொடங்கினாள். ஆனால் அவளுடைய அழுகையால் இப்போது என்ன பயன்? கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம் எதற்கு?.

**எண்ணித் துணிக கருமம், துணிந்த பின்**

**எண்ணுவம் என்பது இழுக்கு.**

## செயற்பாடு - 01

**பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (✓) எனவும் எழுதுங்கள்.**

1. ஓர் ஏழை விவசாயி கருநாகம் ஒன்றை வளர்த்தான்(   )
2. விவசாயியின் மனைவி தன் குழந்தைக்குப் பால் ஊட்டித் தூங்க வைத்தாள். (   )
3. நாய் காவலுக்கு நின்றது. (   )
4. கீரி துடிதுடித்து இறந்தது. (   )
5. குழந்தையைக் கீரி கடித்துவிட்டது. (   )

## செயற்பாடு - 02

**பின்வரும் இடைவெளிகளை நிரப்புங்கள்.**

1. ஓர் ஏழை விவசாயி ஒரு ______________ வளர்த்தான்.
2. கீரி ______________ நின்றது.
3. மனைவி சென்ற பின்பு ______________ ஒன்று அங்கே வந்தது.
4. கீரியின் முகத்தில் ______________ பார்த்தாள்.
5. அந்தப் பெண் ______________ ஓடினாள்.

## சொல் அறிமுகம்

| | |
|---|---|
| ஏழை | - දුප්පත් |
| விவசாயி | - ගොවියා |
| கெட்டிக்காரத்தனம் | - දක්ෂකම |
| எஜமான் விசுவாசம் | - ස්වාමියා කෙරෙහි ඇති විශ්වාසය |
| பால் ஊட்டி | - කිරිපොවා |
| கிணற்றடி | - ළිඳ අසළ |
| காவலுக்கு | - මුරට |
| கருநாகம் | - කළු නයා |
| துண்டு துண்டாக்கியது | - කෑලි කෑලිවලට කැඩුවේය |
| இரத்தம் | - ලේ |
| துக்கம் | - දුක |
| கோபத்தால் | - කෝපයෙන් |
| நிரம்பிய | - පිරුණු |
| அப்பாவி | - අහිංසක |

## செயற்பாடு - 03

**பின்வருவனவற்றுக்கு விடை எழுதுங்கள்.**

1. கீரியின் இயல்புகள் இரண்டைத் தருக.
2. குழந்தை எங்கே தூங்கிக் கொண்டிருந்தது?
3. விவசாயியின் மனைவி முகத்தில் இரத்தத்துடன் இருந்த கீரியைப் பார்த்து என்ன நினைத்தாள்?
4. விவசாயியின் மனைவி கீரிக்கு என்ன செய்தாள்?
5. இக்கதை கூறும் படிப்பினை யாது?

## செயற்பாடு - 04

**பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளி நிரப்புங்கள்.**

**(பெண், பாயில், கீரியைக், குடத்துடன், குழந்தைக்கு)**

1. கிணற்றடிக்குப் ______________ சென்றாள்.
2. குழந்தை ______________ தூங்கிக்கொண்டிருந்தது.
3. தண்ணீர் எடுத்துவர கிணற்றடிக்குக் ______________ சென்றாள்.
4. கதவருகில் நின்று கொண்டிருந்த ______________ கண்டாள்.
5. ______________ பால் ஊட்டினாள்.

**பின்வரும் வாக்கியத்தை அவதானியுங்கள்.**

விவசாயியின் மனைவி தன் குழந்தை'**க்கு**' பாலூட்டிவிட்டுத் தூங்க வைத்தாள்.

குழந்தை ⟶ குழந்தை**க்கு**

குழந்தை**க்கு**ப் பாலூட்டினாள்.

கீரி ⟶ கீரி**க்கு** அடித்தாள்.
அவள் ⟶ அவளு**க்கு** உண்மை விளங்கியது.

## செயற்பாடு - 05

**பின்வரும் சொற்களைக்கு 'கு' உருபு சேர்த்து வாக்கியங்களை முழுமைப்படுத்துங்கள்.**

**(கீரி, பிள்ளை, தம்பி, கடை, நண்பன்)**

1. ________________ பரிசு கொடுத்தார்.
2. ________________ கடிதம் எழுதினார்.
3. ________________ வீட்டுக்கு போனார்.
4. ________________ பகை பாம்பு.
5. ________________ உணவு ஊட்டினார்.

# 13 விகடன்

**நாடகத்தை செவிமடுப்போம், பாத்திரமேற்று உணர்வுபூர்வமாக வாசிப்போம், பாத்திரமேற்று நடிப்போம்.**



**இடம்** - *அரண்மனை*
**காலம்** - *பகல்*
**பாத்திரங்கள்** - *அரசன், விகடகவி, அமைச்சர், நாட்டியப் பெண்கள், காவலாளிகள்.*

*(அரசன் அரியணையில் அமர்ந்துள்ளான்.)*

**அரசன்** : *நாட்டியம் மிக மிக அருமை சபாஷ்......*

**அமைச்சர்** : *ஆம் அரசே! அற்புதம்.*

**அரசன்** : *நாட்டியக் கலையே புத்துயிர் பெற்றது..... ஆஹா என்ன அற்புதம் என்ன அற்புதம்.*

**அமைச்சர்** : *ஆம் அரசே! ஆம்.*

**அரசன்** : *இந்த நாட்டிய மங்கைகளைப்போல் வேறு எவரும் உள்ளனரோ.*

**அமைச்சர்** : *வேறு எவரும் இருக்கமாட்டார்கள் அரசே!*

**அரசன்** : *இவர்களுக்குத் தக்க பொன்னும், பொருளும் பரிசாய் வழங்க வேண்டும்.*

**அமைச்சர்** : *ஆம் அரசே!*

**அரசன்** : *நாட்டிய மங்கைகளே! வாருங்கள். பரிசுகளைப் பெற்றுச் செல்லுங்கள்.*

**நாட்டியப் பெண்** : *வணக்கம் அரசே! மிக்க நன்றிகள்.*

*(நாட்டியப் பெண்கள் போகிறார்கள் காவலாளி வருகிறான்.)*

**காவலாளி** : *மன்னாதி மன்னா! தங்களைச் சந்திக்க விகடகவி ஒருவர் வந்துள்ளார்.*



**அரசன்** : வரச்சொல் அவனை! அவனை முன்பே வரச் சொல்லி இருந்தேன். அவனின் நகைச் சுவை நயத்தைச் சோதிக்கவே அழைத்தேன். எனவே, இங்கு எது நிகழ்ந்தாலும் அவையோரே சிரிக்காதிருங்கள்.

**அமைச்சர்** : அப்படியே ஆகட்டும் அரசே!

**விகடகவி** : மன்னாதி மன்னரே வணங்குகிறேன். தங்கள் பெயரும், புகழும் காடு, மலை, கடல் நிலம் நீர் காற்று எங்கும் பரவிக் காணப்படுகிறது. தங்களைப் போன்ற மன்னர் இருக்கையில் குறையுண்டோ எமக்கு.

**அரசன்** : போதும், நிறுத்து உன் பேச்சை. உன் விகடம் இங்கே செல்லாது. என் அவையினர் ஒருவரும் நகைக்கமாட்டார்கள். நகையாது இருக்கும்படி உத்தரவிட்டு உள்ளேன். எனவே உனக்குப் பரிசும் அளிக்கப் போவதில்லை.

**விகடகவி** : கேவலம், பரிசு பெறவா நான் இங்கு வந்தேன். தங்கள் புகழைக் கேட்டு நேரில் காணவே வந்தேன்.

**அரசன்** : ஆஹா! அப்படியா?

**விகடகவி** : தாங்கள் செய்த போரும், பெற்ற வெற்றியும் எனக்குத் தெரியும். படையில் தங்களுக்குத் தெரியாமல் நானும் போர் செய்தேன்.

**அரசன்** : இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். நான் எத்தனை பேரை வென்றேன் தெரியுமா?

**விகடகவி** : ஏன் எனக்குத் தெரியாது. நானும் அங்கு தானே இருந்தேன்.

**அரசன்** : எப்படி என் வீரம்!

**விகடகவி** : போர்க்காலத்தில் உங்களைப் பார்த்து வியந்தேன். உங்களைப் பின்பற்றப் பல சாகசமும் புரிந்தேன்.

**அரசன்** : என்ன, அப்படியா?

**விகடகவி** : உண்மைதான் அரசே! எதிரிப் படைத்தலைவனின் கால்களை நானல்லவோ வெட்டினேன்.

**அரசன்** : *உண்மையாகவா? எப்படி?*

**விகடகவி** : *பொய் நம் பிறவியிலேயே இல்லை.*

**அரசன்** : *சரி தான். அது ஏனப்பா தலையை விட்டுவிட்டுக் கால்களை முதலில் வெட்டினாய்?*

**விகடகவி** : *தலையைத்தான் எனக்கு முன்னமே யாரோ வெட்டி விட்டனரே.*

**அரசன்** : *என்ன? முண்டத்தின் கால்களைத் தான் நீ வெட்டினாயா? நீ சூரன்தான். நீ கெட்டிக்காரன் தான், நீ மஹா பெரும் விகடன் தான். அஹ்ஹ்ஹ்ஹ்ஹா...... (அனைவரும் நகைத்தனர்.)*

**அரசன்** : *ஆ என்னையும் மறந்தல்லவா நகைத்தேன். உண்மையாகவே இவன் திறமையான விகடன் தான். இதோ! பொன்னும் பொருளும் உனக்கு.*

## சொல் அறிமுகம்

| | | |
|---|---|---|
| **நாட்டியம்** | - | නර්තනය |
| **அற்புதம்** | - | අරුම පුදුම |
| **புத்துயிர்** | - | නවජීවය |
| **விகடகவி** | - | විකටයා |
| **நகைச்சுவை** | - | හාස්‍යය |
| **விகடம்** | - | විකට/විහිළු |
| **உத்தரவிடு** | - | අණ දෙනු |
| **வியப்பு** | - | පුදුම |
| **சாகசம்** | - | අරුම පුදුම ක්‍රියා |
| **பிறவி** | - | උපත් |
| **முண்டம்** | - | හිස නැති ශරීරය |
| **சூரன்** | - | ශූරයා |
| **கெட்டிக்காரன்** | - | දක්ෂයා/සමතා |

## செயற்பாடு - 01

**பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்துள்ள சொற்களை எழுதுங்கள்.**

1. நகைச்சுவை - ____________________
2. ஐயம் - ____________________
3. மன்னன் - ____________________
4. யுத்தம் - ____________________
5. மெய் - ____________________

## செயற்பாடு - 02

இந்நாடகத்தைக் கதையாகச் சுருக்கி எழுதுங்கள்.

## செயற்பாடு - 03

**பின்வரும் கூற்றுக்களை மொழிபெயர்த்து எழுதுங்கள்.**

1. நாட்டியக் கலை புத்துயிர் பெற்றது.

    ______________________________

2. இந்த நாட்டிய மங்கைகளைப் போல், வேறு எவரும் உள்ளனரோ?

    ______________________________

3. எது நிகழ்ந்தாலும், அவையோரே சிரிக்காதீர்கள்.

    ______________________________

4. உன் விகடம் இங்கே செல்லாது.

    ______________________________

5. தங்களைப் போன்ற மன்னர் இருக்கையில் குறையுண்டோ எமக்கு.

    ______________________________

# 14 மொழிகற்றலின் அவசியம்

மொழி மனித நாகரிகத்தின் கண்ணாடி. மொழி மிகச் சிறந்த தொடர்பாடல் ஊடகம். மனிதனையும், விலங்குகளையும் வேறுபடுத்திக் காட்டுவது மொழியே. மனித நேயத்தை வளர்க்க மொழி அவசியம். பிரச்சினைகளையும், இன முரண்பாடு களையும் தீர்த்துக் கொள்ளவும் மொழி அவசியம். மனிதன் தமது கருத்துக்களையும், உணர்வுகளையும் மொழி மூலமே வெளிப்படுத்துகின்றான். உலகில் பல மொழிகள் உள்ளன. எமது நாட்டில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகள் வழக்கில் உண்டு. தமிழ் மொழிக்கும், சிங்கள மொழிக்கும் மிக நீண்ட வரலாறு உண்டு. இலக்கிய வளமும் உண்டு.



மொழியைப் பலரும் பல்வேறு தேவைகளுக்காகக் கற்கின்றனர். தம் கருத்துக்களைத் தெளிவாக வெளிப்படுத்த மொழி தேவை. பொருளாதாரத் தேவைக்கும் மொழி தேவை. ஒருவருக்கு, ஒருவர் இடையே புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ளவும் மொழி அவசியம். தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளவும் மொழி தேவைப்படுகிறது. கலாசாரங்களை புரிந்து கொள்ள மொழி தேவைப்படுகிறது. இரசனை உணர்வை வளர்க்கவும் மொழி தேவை.

இலங்கையில் சிங்களமும், தமிழும் அரசகரும மொழி களாகும். தமிழருக்குச் சிங்களம் இரண்டாம் தேசிய மொழியாகும். சிங்களவருக்குத் தமிழ் இரண்டாம் தேசிய மொழியாகும். எனவே தமிழர் சிங்களத்தையும் சிங்களவர் தமிழும் கற்றல் மிகவும் அவசியம்.

ஒரு மொழி கற்றவன், ஒருவனுக்குச் சமன். இரு மொழிகளைக் கற்றவன் இருவருக்குச் சமன். மும்மொழிகளைக் கற்றவன், மூவருக்குச் சமன் என்பர். இலங்கையராகிய நாம் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளையும் கற்பது நல்லது. உங்கள் இரண்டாம் மொழியான தமிழுக்கு, அழகு, இனிமை எனும் பொருளும் உண்டு. அதன் சிறப்பு உணர்ந்து பேரறிஞர் செந்தமிழ் என்று அழைத்தனர். எனவே நாமும் செந்தமிழைக் கற்றுப் பயன் பெறலாம் அல்லவா?

இரண்டாம் மொழிக் கற்றல் மிகவும் முக்கியம். இது தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்தும். இனங்களுக்கிடையே ஒற்றுமையை வளர்க்கும் பாலமாய் அமையும். நாடு வளம் பெற உதவும். நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்லும். இன்பமிக்க நன் நாடு ஒன்றை உருவாக்கும். எனவே நாமும் இரண்டாம் மொழியைக் கற்போம். இன்பமாக வாழ்வோம்.

## சொல் அறிமுகம்

| | | |
|---|---|---|
| நாகரிகம் | - | ශිෂ්ටාචාරය |
| தொடர்பாடல் ஊடகம் | - | සන්නිවේදන මාධ්‍ය |
| விலங்குகள் | - | සිවුපා සත්තු |
| மனிதநேயம் | - | මානව දයාව |
| பிரச்சினை | - | ගැටලු |
| இன முரண்பாடு | - | ජාතීන් අතර වෙනස්කම් |
| தீர்த்துக்கொள்ள | - | විසඳා ගැනීම |
| கருத்துக்கள் | - | අදහස් |
| உணர்வுகள் | - | හැඟීම |
| வழக்கில் உண்டு | - | භාවිතයේ ඇත |
| இலக்கிய வளம் | - | සාහිත්‍ය සම්පත |
| பொருளாதாரம் | - | ආර්ථිකය |
| புரிந்துணர்வு | - | අවබෝධය |
| தொழில் வாய்ப்பு | - | රැකියා අවස්ථා |
| கலாசாரம் | - | සංස්කෘතිය |
| ரசனை உணர்வு | - | රසාස්වාදන හැඟීම |
| அரசகரும மொழி | - | රාජ්‍ය භාෂාව |
| பேரறிஞர் | - | විද්වතා |
| ஒருமைப்பாடு | - | සමගිය |
| அபிவிருத்தி | - | සංවර්ධනය |

## செயற்பாடு - 01

**பின்வரும் கூற்றுக்களுக்குப் பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து இடைவெளி நிரப்புங்கள்.**

1. மொழி மிகச்சிறந்த ____________________ ஆகும்.
   (தொலைத்தொடர்பு சாதனம், தொடர்பாடல் ஊடகம், மனித நாகரிகத்தின் கண்ணாடி)

2. இலங்கையில் ____________________ அரச கரும மொழிகளாகும்.
   (ஆங்கிலமும் சிங்களமும், சிங்களமும் தமிழும், தமிழும் ஆங்கிலமும்)

3. பேரறிஞர் தமிழை ____________________ என்று அழைத்தனர்.
   (செந்தமிழ், கொடுந்தமிழ், பேச்சுத்தமிழ்)

4. இரண்டாம் மொழிக் கற்றலானது ____________________.
   (தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்தாது, நாடு வளம்பெற உதவாது, இனங்களுக்கிடையேயான ஒற்றுமையை வளர்க்கும் ).

## செயற்பாடு - 02

1. மனித நாகரிகத்தின் கண்ணாடி எது ?
2. எமது நாட்டில் வழக்கில் உள்ள மொழிகள் எவை ?
3. இலங்கையின் அரசகரும மொழிகள் எவை ?
4. மும்மொழி கற்றவர் எத்தனை பேருக்குச் சமன் ?
5. சிங்களவரின் இரண்டாம் தேசிய மொழி எது ?

## செயற்பாடு - 03

**மொழி கற்றலின் பயன்பாடுகளை அட்டவணைப்படுத்தி எழுதுங்கள். அவற்றைக் கூறுங்கள்.**

1. ______________________________
2. ______________________________
3. ______________________________
4. ______________________________
5. ______________________________

## செயற்பாடு - 04

**பின்வரும் சொற்றொகுதிகளைப் பயன்படுத்தி 10 வசனங்கள் கூறுங்கள். அவற்றை எழுதுங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| எனக்கு | (த்) தமிழ்<br>(ச்) சிங்களம்<br>ஆங்கிலம் | → வாசிக்க<br>எழுத<br>பேச<br>விளங்கிக் கொள்ள | → முடியும்<br>முடியாது<br>தெரியும்<br>தெரியாது<br>வேண்டும். |

## செயற்பாடு - 05

**பின்வரும் அமைப்புக்களை அவதானியுங்கள்.**

| | **பேசு** | **எழுது** | **வாசி** |
|---|---|---|---|
| நான் தமிழ் | பேசுவேன் | எழுதுவேன் | __________ |
| நாங்கள் தமிழ் | பேசுவோம் | எழுதுவோம் | __________ |
| நான் தமிழ் | __________ | __________ | வாசிப்பேன் |
| நாங்கள் தமிழ் | __________ | __________ | வாசிப்போம் |

| | **பேசு** | **எழுது** | **வாசி** |
|---|---|---|---|
| நான் சிங்களம் | பேசுகின்றேன் | எழுதுகின்றேன் | __________ |
| நாங்கள் சிங்களம் | பேசுகின்றோம் | எழுதுகின்றோம் | __________ |
| நான் சிங்களம் | __________ | __________ | வாசிக்கிறேன் |
| நாங்கள் சிங்களம் | __________ | __________ | வாசிக்கிறோம் |

| | **பேசு** | **எழுது** | **வாசி** |
|---|---|---|---|
| நான் ஆங்கிலம் | பேசினேன் | எழுதினேன் | __________ |
| நாங்கள் ஆங்கிலம் | பேசினோம் | எழுதினோம் | __________ |
| நான் ஆங்கிலம் | __________ | __________ | வாசித்தேன் |
| நாங்கள் ஆங்கிலம் | __________ | __________ | வாசித்தோம் |

## செயற்பாடு - 06

**பின்வரும் அட்டவணையைப் பூர்த்திசெய்யுங்கள்.**

| | நான் | | | நாங்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| படி | படித்தேன் | படிக்கின்றேன் | படிப்பேன் | படித்தோம் | படிக்கின்றோம் | படிப்போம் |
| குடி | ______ | ______ | ______ | ______ | ______ | ______ |
| வாசி | ______ | ______ | ______ | ______ | ______ | ______ |
| சமை | சமைத்தேன் | சமைக்கிறேன் | சமைப்பேன் | சமைத்தோம் | சமைக்கின்றோம் | சமைப்போம் |
| கதை | ______ | ______ | ______ | ______ | ______ | ______ |
| வை | ______ | ______ | ______ | ______ | ______ | ______ |
| நட | நடந்தேன் | நடக்கின்றேன் | நடப்பேன் | நடந்தேன் | நடக்கின்றேன் | நடப்பேன் |
| மற | ______ | ______ | ______ | ______ | ______ | ______ |
| திற | ______ | ______ | ______ | ______ | ______ | ______ |

## செயற்பாடு - 07

**பின்வரும் அட்டவணையைப் பூர்த்திசெய்யுங்கள்.**

| | நான் | | | நாங்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| ஆடு | ஆடினேன் | ஆடுகின்றேன் | ஆடுவேன் | ஆடினோம் | ஆடுகின்றோம் | ஆடுவோம் |
| ஓடு | ______ | ______ | ______ | ______ | ______ | ______ |
| பாடு | ______ | ______ | ______ | ______ | ______ | ______ |
| கூட்டு | கூட்டினேன் | கூட்டுகின்றேன் | கூட்டுவேன் | கூட்டினோம் | கூட்டுகின்றோம் | கூட்டுவோம் |
| அனுப்பு | ______ | ______ | ______ | ______ | ______ | ______ |
| வாங்கு | ______ | ______ | ______ | ______ | ______ | ______ |
| பழகு | பழகினேன் | பழகுகின்றேன் | பழகுவேன் | பழகினோம் | பழகுகின்றோம் | பழகுவோம் |
| எழுது | ______ | ______ | ______ | ______ | ______ | ______ |
| கழுவு | ______ | ______ | ______ | ______ | ______ | ______ |

## செயற்பாடு - 08

**பின்வருவனவற்றை நிகழ்காலத்தில் அமைத்து எழுதுங்கள்.**

1. **வாசி** - நான் ______________ நாங்கள் ______________

2. **சுமை** - நான் ______________ நாங்கள் ______________

3. **நடி** - நான் ______________ நாங்கள் ______________

4. **பேசு** - நான் ______________ நாங்கள் ______________

5. **தள்ளு** - நான் ______________ நாங்கள் ______________

## செயற்பாடு - 09

**பின்வருவனவற்றை இறந்தகாலத்தில் அமைத்து எழுதுங்கள்.**

1. **கிழி** - நான் ______________ நாங்கள் ______________

2. **நினை** - நான் ______________ நாங்கள் ______________

3. **ஆடு** - நான் ______________ நாங்கள் ______________

4. **ஓடு** - நான் ______________ நாங்கள் ______________

5. **விளையாடு** - நான் ______________ நாங்கள் ______________

## செயற்பாடு - 10

பின்வருவனவற்றை எதிர்காலத்தில் அமைத்து எழுதுங்கள்.

1. குடி - நான் ______________ நாங்கள் ______________

2. யோசி - நான் ______________ நாங்கள் ______________

3. வை - நான் ______________ நாங்கள் ______________

4. பாடு - நான் ______________ நாங்கள் ______________

5. தேடு - நான் ______________ நாங்கள் ______________

## செயற்பாடு - 11

### இறந்தகாலம்

**முதல் நிரலையும் நான்காம் நிரலையும் அவதானித்து இடைவெளி நிரப்புங்கள்.**

| | மடி | கடி | மற | பற |
|---|---|---|---|---|
| நான் | மடித்தேன் | ________ | மறந்தாய் | ________ |
| நாங்கள் | மடித்தோம் | ________ | மறந்தோம் | ________ |
| நீ | மடித்தாய் | ________ | மறந்தாய் | ________ |
| நீங்கள் | மடித்தீர்கள் | ________ | மறந்தீர்கள் | ________ |
| அவர் | மடித்தார் | ________ | மறந்தார் | ________ |
| அவன் | மடித்தான் | ________ | மறந்தான் | ________ |
| அவள் | மடித்தாள் | ________ | மறந்தாள் | ________ |
| அவர்கள் | மடித்தார்கள் | ________ | மறந்தார்கள் | ________ |
| அது | மடித்தது | ________ | மறந்தது | ________ |
| அவை | மடித்தன | ________ | மறந்தன | ________ |

## செயற்பாடு - 12

### இடைவெளிகளை நிரப்புங்கள்.

| | பார் | சேர் | வளர் |
|---|---|---|---|
| நான் | பார்த்தேன் | ________ | ________ |
| நாங்கள் | ________ | ________ | ________ |
| நீ | ________ | ________ | ________ |
| நீங்கள் | ________ | ________ | ________ |
| அவர் | ________ | ________ | ________ |
| அவன் | ________ | ________ | ________ |
| அவள் | ________ | ________ | ________ |
| அவர்கள் | ________ | ________ | ________ |
| அது | ________ | ________ | ________ |
| அவை | ________ | ________ | ________ |

## செயற்பாடு - 13

### இடைவெளிகளை நிரப்புங்கள்.

| | ஆடு | பாடு | விடு | சாப்பிடு | கட்டு |
|---|---|---|---|---|---|
| நான் | ஆடினேன் | ________ | விட்டேன் | ________ | ________ |
| நாங்கள் | ஆடினோம் | ________ | விட்டோம் | ________ | ________ |
| நீ | ஆடினாய் | ________ | விட்டாய் | ________ | ________ |
| நீங்கள் | ஆடினீர்கள் | ________ | விட்டீர்கள் | ________ | ________ |
| அவர் | ஆடினார் | ________ | விட்டார் | ________ | ________ |
| அவன் | ஆடினான் | ________ | விட்டான் | ________ | ________ |
| அவள் | ஆடினாள் | ________ | விட்டாள் | ________ | ________ |
| அவர்கள் | ஆடினார்கள் | ________ | விட்டார்கள் | ________ | ________ |
| அது | ஆடியது | ________ | விட்டது | ________ | ________ |
| அவை | ஆடின | ________ | விட்டன | ________ | ________ |

## செயற்பாடு - 14

**இடைவெளிகளை நிரப்புங்கள்.**

| | செய் |
|---|---|
| நான் | செய்தேன் |
| நாங்கள் | செய்தோம் |
| நீ | செய்தாய் |
| நீங்கள் | ________ |
| அவர் | ________ |
| அவன் | ________ |
| அவள் | ________ |
| அவர்கள் | ________ |
| அது | ________ |
| அவை | ________ |

## செயற்பாடு - 15

**பின்வரும் இடைவெளியை நிரப்புங்கள்.**

1. நாங்கள் (குடி) ____________________
2. அவர்கள் (சாப்பிடு) ____________________
3. நீங்கள் (அழு) ____________________
4. அவள் (பற) ____________________
5. நான் (கதை) ____________________

# 15 நாயின் சுயசரிதை

**படத்தைப் பற்றி கலந்துரையாடுவோம். ஆசிரியர் வாசிப்பதை செவிமடுப்போம், பொருள் விளங்கி வாசிப்போம்.**



அது ஒரு குளிர் காலம். நிலா வெளிச்சம் ஜன்னல் வழியே தெரிந்தது. ஒரு நாயின் முனகல் ஒலி கேட்டது. நான் ஜன்னல் வழியே எட்டிப்பார்த்தேன். வயதான நாய் ஒன்று குளிரில் நடுங்கிக்கொண்டு இருந்தது. அது என்னைப் பார்த்தது. மெது வாகப் பேசத் தொடங்கியது.

மகளே! அந்தக் காலம் ஓர் இனிய காலம். இன்பமாக வாழ்ந்த காலம். நினைக்கும்போதே, சந்தோஷமாக இருக்கிறது. தைமாதம் பிறந்தது. அன்று பொங்கற் பண்டிகை. அன்றைய தினம் எனது அம்மா அழகிய குட்டிகள் ஐந்தை ஈன்றார். அதில் நான் கடைக்குட்டி. எனக்கு இரண்டு அண்ணாமாரும், இரண்டு அக்காமாரும் இருந்தனர். எனது உடல் பஞ்சு போன்று இருந்தது. அதனால் அனைவரும் என்னை விரும்பினார்கள். 'வீரா' என என்னை அழைத்தார்கள்.

என் தாயின் அரவணைப்பில் நான் மகிழ்வுடன் வாழ்ந்தேன். ஆனால், அது சிறிது காலம் தான். ஒருநாள் அந்த வீட்டுக் கடைக்குட்டியின் நண்பி ரஞ்சனா வந்தாள். என்னைக் கண்டு ஆசைப்பட்டாள். என்னை அவளுடன் அவளது வீட்டுக் குக் கொண்டு சென்றாள். ரஞ்சனாவின் வீடு பெரிய வீடு. அங்கு நான் மிகவும் சந்தோசமாக வளர்ந்தேன்.

அங்கு நான் ஓடினேன், பாய்ந்தேன், சந்தோசமாக விளை யாடினேன், திரிந்தேன். வீட்டுக்கு வருவோர் என்னைக் கண்டு பயந்தார்கள். திருடரை ஓட ஓட விரட்டினேன். கோழிக் குஞ்சு களை வேட்டையாடினேன். கீரிகளும் கீரிப்பிள்ளைகளும் என்னைப் பார்த்துப் பயந்து ஓடின. சோறும் மீனும் நன்றாக உண்டேன். ரஞ்சனா என் குட்டித் தேவதை. என் உயிர்த் தோழி. என்னைக் கொஞ்சிக் கொஞ்சி விளையாடுவாள். அவளும் நானும் ஓடி விளையாடுவோம். பந்து விளையாடுவோம். இப்படி இன்பமாகக் காலம் நகர்ந்தது.

ரஞ்சனா புலமைப்பரிசில் பரீட்சை எழுதினாள். அதில் கூடிய புள்ளிகள் பெற்றாள். அதனால் நகரத்திலுள்ள பிரசித்தி பெற்ற பாடசாலையில் அனுமதி கிடைத்தது. அவள் அங்கு தங்கிப் படிக்க நேர்ந்தது. நானும் அவளும் கவலையுடன் பிரிந்தோம்.

அவளுடன் என் பொற்காலம் மெல்ல மெல்ல அகன்றது. என்னைக் கொஞ்ச எவரும் இல்லை. என்னுடன் விளையாட யாரும் இல்லை காலம் மெல்ல நகர்ந்தது. நான் துயரத்துடன் இருந்தேன். உணவு மட்டும் வேளைக்குக் கிடைத்தது. உணவு மட்டும் வாழ்க்கை ஆகுமா?

விடுமுறை வந்ததும் எனக்குக் கொண்டாட்டம். விடுமுறைக்கு ரஞ்சனா வருவாள். அப்பொழுது தாயைக் கண்ட கன்று போல அவளிடம் ஓடுவேன். அவளும் அன்புடன் என்னை அணைத்துக் கொள்வாள். விடுமுறையில் ஒரே விளையாட்டுத்தான் வேறு வேலை அவளுக்கில்லை. என்னால் ரஞ்சனா படிக்கவில்லை. அதனால் அவளது பெற்றோர் கவலைப்பட்டார்கள். அவளையும் ஏசினார்கள். எனக்கு மிகவும் கவலையாக இருந்தது. ரஞ்சனா அழுதாள். என்னால் தாங்க முடியவில்லை. எனவே வீட்டைவிட்டு செல்ல முடிவெடுத்தேன்.

இரவோடு, இரவாக வீட்டைவிட்டு வெளியேறினேன். காட்டிலும், மேட்டிலும் அலைந்து திரிந்தேன். பல இன்னல்களை அனுபவித்தேன். பலரும் என்னை துரத்தித் துரத்தி அடித்தனர். தெரு நாய்களும், நாய்க்குட்டிகளும் கூட என்னைத் துரத்தின. பசியும் என்னைத் துரத்தியது. பசியால் தவித்தேன். இறுதியில் உன்னைக் கண்டேன் என்றது.

மகளே! இந்த ஏழைக்கு உதவுவாயா? யாரும் இன்றி அநாதையாய் தவிக்கின்றேன். உனது வீட்டில் சிறிது இடம் தருவாயா? என்று கேட்டது.

என் மனம் இரங்கியது. ஓ எனத் தலையசைத்தேன்.

## செயற்பாடு - 01

**பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் எழுதுக.**

1. அது ஒரு குளிர் காலம். ( )
2. சூரிய வெளிச்சம் ஜன்னல் வழியே தெரிந்தது. ( )
3. வீராவின் குட்டித் தேவதை ரஞ்சனா ( )
4. ரஞ்சனா ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசிலில் முதலிடம் பெறவில்லை. ( )
5. வீரா பல இன்னல்களை அனுபவிக்க இல்லை. ( )

## செயற்பாடு - 02

1. ஜன்னல் வழியே தெரிந்தது எது?
2. வீரா பிறந்த மாதம் எது?
3. வீராவுக்கு எத்தனை அண்ணாமாரும், அக்காமாரும் இருந்தனர்?
4. இங்கு கூறப்படும் குட்டித் தேவதையின் பெயர் யாது?
5. வீராவைத் துரத்தியவை எவை?

## சொல் அறிமுகம்

| | | |
|---|---|---|
| குளிர்காலம் | - | සීත කාලය |
| நிலா வெளிச்சம் | - | චන්ද්‍රාලෝකය/සඳ එළිය |
| முனகல் ஒலி | - | කෙඳිරිල්ල |
| நடுங்கி | - | වෙව්ලා |
| மெதுவாக | - | සෙමෙන් |
| இனிய காலம் | - | යහපත් කාලය |
| இன்பம் | - | සැපය/සතුට |
| கடைக்குட்டி | - | බඩ පිස්සා |
| அரவணைப்பு | - | රැකවරණය |
| திரிந்தேன் | - | ඇවිද්දෙමි |
| கீரி | - | මුගටියා |
| கீரிப்பிள்ளை | - | මුගටි පැටියා |
| நகர்ந்தது | - | ගෙවී ගියා |
| பொற்காலம் | - | ස්වර්ණමය යුගය |
| கொண்டாட்டம் | - | උත්සවය |
| ஏசினார்கள் | - | බැන්නා |
| அலைந்து திரிந்தேன் | - | එහෙ මෙහෙ ඇවිද්දෙමි |
| இன்னல்கள் | - | කරදර |
| அனுபவித்தேன் | - | වින්දෙමි |
| அநாதை | - | අනාථ |

## செயற்பாடு - 03

இச் சுயசரிதையை உங்கள் மொழிநடையில் பத்து வாக்கியங்களில் கூறுங்கள்.

## செயற்பாடு - 04

**பின்வரும் சட்டகத்தைப் பயன்படுத்திக், கட்டுரை ஒன்றை எழுதுங்கள்.**

**பேனாவின் சுயசரிதை**

★ பொருத்தமான அறிமுகம் - பேனாவின் தற்போதைய நிலை.

★ பேனை உருவான விதம்.

★ மூலப்பொருட்கள் தொழிற்சாலையில் முழு உருப்பெற்ற விதம்.

★ தொழிற்சாலையில் இருந்து விற்பனை நிலையத்திற்குக் கொண்டுவரல்.

★ (காட்சிப் பொருளாக இருத்தல்.)

★ பலர் பார்வையிடல் - ஒருவர் வாங்குதல்.

★ வாங்கிய பின் நடந்த சம்பவங்கள்.

★ பொருத்தமான முடிவுரை.

## செயற்பாடு - 05

நாயின் சுயசரிதையை அடிப்படையாகக் கொண்டு நீர் விரும்பிய வேறொரு பிராணியின் சுயசரிதையை எழுதுங்கள்.

**பின்வரும் சொற்றொடர்களை அவதானியுங்கள்**

**இனிய** காலம்.

**அழகிய** குட்டிகள்.

**பெரிய** வீடு.

**நன்றாக** உண்டேன்.

**கவலையாகப்** பிரிந்தேன்.

இவை பெயர்ச்சொற்களையும், வினைச்சொற்களையும் சிறப்பிக்கின்றன.

சிறிய

பெரிய

நீண்ட → கவிதை எழுதினேன்.

அழகிய

புதிய

## செயற்பாடு - 06

**கீழே தரப்பட்ட சொற்களை அடிப்படையாகக்கொண்டு வசனம் அமையுங்கள்.**

1. பழைய - ____________________
2. சிவப்பு - ____________________
3. புதிய - ____________________
4. அழகிய - ____________________
5. நல்ல - ____________________
6. வெள்ளை - ____________________

**சிறிய பூ** அழகானது.

**பெரிய புத்தகம்** வாங்கினேன்.

**நீண்ட கதை** கேட்டேன்.

**அழகிய முகம்** பார்த்தேன்.

**புதிய வீடு** கட்டினேன்.

பச்சை நிற எழுத்திலுள்ள இச்சொற்கள் பெயர்ச்சொற்களை சிறப்பிக்கின்றன.

**மெல்லக்** கதைத்தேன். **மெல்லக்** கதைத்தோம்.

**வேகமாக** ஓடினேன். **வேகமாக** ஓடினோம்.

**விரைவாக** நடந்தேன். **விரைவாக** நடந்தோம்.

**கவனமாகப்** படித்தேன். **கவனமாகப்** படித்தோம்.

பச்சை நிற எழுத்திலுள்ள இச்சொற்கள் வினைச் சொற்களைச் சிறப்பிக்கின்றன.

## செயற்பாடு - 07

**கீழ்வரும் சொற்களைக் கொண்டு வாக்கியம் அமையுங்கள்.**

1. அழகாக - ______________________
2. மெதுவாக - ______________________
3. கோவமாக - ______________________
4. சந்தோஷமாக - ______________________
5. கவலையாக - ______________________
6. உண்மையாக - ______________________

## செயற்பாடு - 08

**பின்வரும் இடைவெளிகளில் பொருத்தமான அடை மொழிகளை இணைத்து எழுதுங்கள்.**

1. அது ஒரு ______________________ காலம்.

2. ______________________ நாய் ஓடியது.

3. எலிகளை ______________________ வேட்டையாடினேன்.

4. கீரிகளும், கீரிப்பிள்ளைகளும் ______________________ ஓடின.

**பின்வரும் வாக்கியங்களை வாசியுங்கள்,**

நாய்க் **குட்டி** ஓடியது.

பூனைக் **குட்டி** வந்தது.

இவ்வாக்கியங்களில் வரும் **குட்டி** போன்று வேறு பல இளமைப் பெயர்கள் உண்டு. அவற்றைக் கற்போம்.



ஆடு **ட்டுக்**

நாய் **க்**

பூனை **க்**

முயல்

மான்

யானை **க்**




அணில் **ற்**

கிளி **ப்**

தென்**னம்**

கமுகு **கம்**

கீரி **ப்**



# பின்வரும் சொற்களை அவதானியுங்கள்

மரம், சிங்கம், பழம்




1. **மரத்தை** வெட்டினான்.

2. **மரத்தால்** விழுந்தான்.

3. **மரத்தோடு** கட்டினான்.

4. **மரத்துக்கு** தண்ணீர் ஊற்றினான்.

5. **மரத்தில்** ஏறினான்.

6. இந்த **மரத்தின்** பழம் இனிமையானது.

## செயற்பாடு - 09

**பின்வரும் அட்டவணையை நிரப்புங்கள்**

| மரம் | சிங்கம் | பழம் |
|---|---|---|
| மரத்தை | ________ | ________ |
| மரத்தால் | ________ | ________ |
| மரத்தோடு | ________ | ________ |
| மரத்துக்கு | ________ | ________ |
| மரத்தில் | ________ | ________ |
| மரத்தின் | ________ | ________ |

**பின்வரும் சொற்களை அவதானியுங்கள்**

மாடு, ஆடு, வீடு

| | | | | |
|---|---|---|---|---|
| மாடு<br>ஆடு<br>வீடு | + | ட்டு | + | ஐ<br>ஆல்<br>ஒடு<br>க்கு<br>இல்<br>இன் |

1. **மாட்டைக்** கட்டினான்.
2. **மாட்டால்** உழுதான்.
3. **மாட்டோடு** வந்தான்.
4. **மாட்டுக்கு** புல் வைத்தான்.
5. **மாட்டில்** பால் கறந்தான்.
6. **மாட்டின்** பால் இனிமையானது.

## செயற்பாடு - 11

**பின்வரும் அட்டவணையை நிரப்புங்கள்**

| ஆடு | சிங்கம் | பழம் |
|---|---|---|
| ஆட்டை | ______ | ______ |
| ஆட்டால் | ______ | ______ |
| ஆட்டோடு | ______ | ______ |
| ஆட்டுக்கு | ______ | ______ |
| ஆட்டில் | ______ | ______ |
| ஆட்டின் | ______ | ______ |

### பின்வரும் சொற்களை அவதானியுங்கள்

சோறு, கிணறு, ஆறு

சோறு
கிணறு
ஆறு
+
ற்று
+
ஐ
ஆல்
ஒடு
க்கு
இல்
இன்

1. **சோற்றை** உண்டாள்.

2. **சோற்றால்** கஞ்சி செய்தாள்.

3. **சோற்றோடு** வந்தாள்.

4. **சோற்றுக்கு** உப்புப் போட்டாள்.

5. **சோற்றில்** கல் எடுத்தாள்.

6. **சோற்றின்** சுவை அதிகம்.

## செயற்பாடு - 12

| சோறு | கிணறு | ஆறு |
| --- | --- | --- |
| சோற்றை | ______ | ______ |
| சோற்றால் | ______ | ______ |
| சோற்றோடு | ______ | ______ |
| சோற்றுக்கு | ______ | ______ |
| சோற்றில் | ______ | ______ |
| சோற்றின் | ______ | ______ |

1. கமலத்தை வரச் சொல்லுங்கள்.

2. கமலத்தால் வர முடியவில்லை.

3. கமலத்தோடு வந்தான்.

4. கமலத்துக்கு சுகம் இல்லை.

5. கமலத்தில் பிழை இல்லை.

6. கமலத்தின் வீடு அழகியது.

## செயற்பாடு - 09

**பின்வரும் சொற்களுக்கு சமமான கருத்து தரும் சொற்களை பாடத்தில் இருந்து தெரிந்து எழுதுங்கள்.**

1. சந்திரன் ____________________

2. சாரளம் ____________________

3. உடல் ____________________

4. அன்னை ____________________

5. இல்லம் ____________________

6. நாள் ____________________

7. மகிழ்ச்சி ____________________

8. கவலை ____________________

9. சிரசு ____________________

10. நண்பி ____________________

## செயற்பாடு - 10

**பின்வரும் சொற்களுக்கான எதிர்க்கருத்துத் தரும் சொற்களைப் பாடத்தில் இருந்து தெரிந்து எழுதுங்கள்.**

1. இருள் ______________________________
2. பகல் ______________________________
3. இளமை ______________________________
4. அழுதது ______________________________
5. கவலை ______________________________
6. துன்பம் ______________________________
7. நிறை ______________________________
8. மேடு ______________________________
9. சிலர் ______________________________
10. முதல் ______________________________

## செயற்பாடு -11

**பின்வரும் இடைவெளிகளுக்குப் பொருத்தமான இளமைப் பெயர்களைக் கொண்டு வாக்கியங்களை நிறைவு செய்யுங்கள்.**

1. அணில் ______________________ மாம்பழம் தின்றது.
2. கீரி ______________________ பாம்பைக் கண்டு ஓடியது.
3. பூனை ______________________ எலி பிடித்தது.
4. நாய் ______________________ திருடனை விரட்டியது.
5. கோழி ______________________ கழுகைக் கண்டு பயந்தது.